உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

...ர் 40 )( ரௌத்திரி ஆண்டு மாசித்திங்கள் 10—3—81

வே. சாமிநாத...



மயிலை ஸ்ரீ கற்பகாம்பிகையின் திருவுருவம்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[★]—

கருணா நிதியே
  கடவுளே அன்பர்
பொருளான பேரின்பப்
  பொற்பே — ஒருநாளும்
நீங்கா தெனதறிவில்
  நின்றசுகா னந்தமே
ஆங்காண்நீ சொக்கநாதா.

—சொக்கநாத வெண்பா. 74


ஆசிரியர் :-

வித்துவான்

இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

சி. அருணைவடிவேல் முதலியார்.



குருபாதம்


# "ஞானசம்பந்தம்"


தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 40 || 10-3-81 || இதழ் 4


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | உத்திர ஒலி விழா ... | 145 |
| 2 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அருளுரை | 148 |
| 3 | மயிலை ஸ்ரீ கற்பகாம்பிகை பதிகம் ... | 151 |
| 4 | ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் ... | 152 |
| 5 | திருஇராமனதீச்சரம், திருப்பயற்றூர், திருச்செங்காட்டங்குடித் தலச் சிறப்புக்கள் ... | 161 |
| 6 | அபிராமி அந்தாதி ... | 178 |
| 7 | அரசு ஆலயம் அறப்பணிகள் ! ... | 183 |
| 8 | செய்திகள் ... | 192 |
| 9 | எதிர்காலம் ... | 196 |



ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ 12.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 18.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 40 | ரௌத்திரி - மாசி - 10—3—81 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## உத்திர ஒலி விழா

### மண்ணிற்பிறந்தார் பெறும் பயன் ;

தமிழர் பண்பாட்டு வரலாறு பெரும்பாலும் சமயஞ்சார்ந்ததாகவே விளங்குகின்றது. தமிழக மக்களின் பண்டிகைகள் மற்றும் விழாக்கள் பலவும், பல நூற்றாண்டுகளாகவே தெய்விகப் பின்னணியைக் கொண்டே நிகழ்ந்துவந்திருப்பதை வரலாற்றால் நன்கு அறியலாம். விழாக்கள் பெரும்பாலும் சமூகக்கூட்டுறவையும், விருந்தோம்பும் பண்பாட்டு வளர்ச்சியையும் சார்ந்தே நிகழ்ந்துள்ளன. எல்லா விழாக் களிலும் இறையுணர்வு இழையோடியே விளங்கின விளங்குகின்றன. சேக்கிழார்சுவாமிகள் மண்ணில் பிறந்தார் பெறும்பயன் இரண்டு என்பர். ஒன்று சிவனடியார்களை உண்பித்து மகிழ்வது, பிறிதொன்று சிவபிரானுக்கு விழாக்கண்டு பூரிப்பது என்று பாடுகிறார்.

" மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணினால் அவர்நல்விழாப் பொலிவுகண் டார்தல் ,,

இவ்வாறு தமிழகத்தில் சிவாலயங்களில் நடைபெற்ற பலவிழாக்களைத் திருஞானசம்பந்தர் தமது திருமயிலாப்பூர்த்திருப்பதிகத்தில் குறித் தருளுகிறார். அவற்றுள் ஒன்றே பங்குனி உத்திரத்திருநாள்.

## பங்குனிப் பெருவிழா :

தமிழகச்சிவாலயங்களில் பெரும்பாலும் பங்குனி மற்றும் சித்திரைத்திங்களில் பத்துநாள் பெருவிழாக் காண்பது வழக்கம். இவை சிறப்பாக பௌர்ணமி நாளில் நிறைவுறும். பங்குனித்திங்கள் பௌர்ணமி நாளில் உத்திரவிண்மீன் இணைந்துவரும். இந்நாளே பங்குனி உத்திரப்பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழா ஆரவாரமிக்க 'ஒலிவிழா' வாக நடைப்பெற்றதாகத் தேவாரத்தால் அறியவருகிறது. இதனை,

"மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்"

எனத் திருஞானசம்பந்தர் குறித்தருளுகின்றார். பங்குனி உத்திர விழாப்பற்றிய பல விரிவான செய்திகள் நமது சமயநூல்களுள் உள்ளன. திருவாரூர், காஞ்சிபுரம் ஆகிய இருதலங்களிலும் இவ் விழா பெருஞ்சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருகிறது.

## ஐயன்மணவிழா :

ஐயன் அளித்த இருநாழிநெல்கொண்டு முப்பத்திரண்டு அறங் களையும் இயற்றிய உமாதேவியாரைச் சிவபிரான் காஞ்சியில் மணங் கொண்ட திருநாள் பங்குனிஉத்திரம் என்பர். அமரர்நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட தியாகராஜப் பெருமான், 'அஜபா' நடனத்துடன் எழுந்தருளும் பெருவிழாத் திருவாரூரில் பெருஞ்சிறப்புடன் இத் திரு நாளில் நிகழ்வுறும். பங்குனி உத்திரம் தீர்த்தவாரியாக நாடெங்கும் உள்ள பல சிவாலயங்களில் சிறப்புற நிகழ்ந்துவருகிறது. இதனை 'உருத்திரபாதத் தீர்த்தவிழா' என்று குறிப்பர். தருமையாதீன அருளாட்சிக்கு உட்பட்ட திருக்கோயில்களாகிய வேளூர், அருள்மிகு, தையல்நாயகி உடனாகிய அருள்மிகு வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம், திருபுவனம் அருள்மிகு அறம்வளர்த்தநாயகி உடனுறை அருள்மிகு கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம், பேரளம் அருள்மிகு பவானிஅம்மை உடனுறை அருள்மிகு சுயம்புநாத சுவாமி

தேவஸ்தானம் ஆகியவற்றில் பங்குனி உத்திரப் பெருவிழா மிகச் சிறப்பாக ஆண்டுதோறும் நிகழ்ந்துவருகிறது.

## ஆரூரில் அணிவிழா :

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வரலாற்றோடு பங்குனி உத்திரப் பெருவிழாத் தொடர்புடையது திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து வாழ்ந்திருந்த நம்பியாரூரர், திருவாரூர் பங்குனி உத்திர விழாவினை நினைந்து அக்காலை ஆரூர்ப் பெருமானைக்கண்டு வணங்க விழைந்த விருப்பால் தமது சூளுறவினையும் மறந்து ஒற்றியூர் எல்லை கடக்கிறார். இருகண் பார்வையினையும் இறைவன் மறைப்பிக்கிறார். பின் காஞ்சிபுரம் போந்து இடக்கண் பார்வையினையும், திருவாரூர்ப் போந்து வலக்கண் பார்வையினையும் பெற்றுப் பங்குனிஉத்திர விழாக் கண்டு மகிழ்ந்தார் எனப் பெரியபுராணம் இவ்வரலாற்றை விரிவாகப் பேசுகிறது. இவ்விழாவை அடியார்களுக்கு அன்னம் பாலித்துச் சிறப்பாகக் கொண்டாடச் சுந்தரர் விரும்பிய போதே, சிவபிரான் திருப்புகலூரில் சுட்ட செங்கல்லைப் பொன்னாக்கி வழங்கியும், குண்டையூரில் நெல்மலை வழங்கியும் திருவிளையாடல்கள் புரிந்தார்.

## அர்த்தமுள்ள அணிவிழா :

'சைவ சமயமே சமயம்' என்று நமது முன்னோர் போற்றிப் பாராட்டியமை ஆழ்ந்த நோக்குடையது. சமயம் பக்தி உணர்வை வளர்ப்பதோடு மட்டும் நின்றுவிடாது மக்களின் பண்பாட்டு வளர்ச்சியிலும் பங்கேற்கவேண்டும் என்ற உண்மையை உணர்த்திய பெருமை சைவத்திற்கே உரியது. இதனை "யாவர்க்குமாம் இறைவற்கொருபச்சிலை" என்ற திருமந்திரம் நன்கு உணர்த்தும். "பசுவுக்கு ஒருவாயுறை" என்பதனால் ஜீவகாருண்யத்தையும், "உண்ணும்போது ஒரு கைப்பிடி" என்பதனால் மனிதாபிமானத்தையும், "இன்னுரைதாமே" என்பதனால் பண்பாட்டையும் பேசிக் காட்டுகின்றது இத்திருப்பாடல் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றுவகைப் பகுப்பாக வளர்ந்து நிற்கும் சைவ சமயத்தின் ஒவ்வொரு விழாவும் அர்த்தமுள்ள பின்னணி ஒன்றைத்தன்பால் தாங்கி நிற்கக் காண்கிறோம். விழாக் காலங்களில் கோயிலைத்தூய்மை செய்தல், நகரினை அழகுபடுத்துதல், மக்கள் நலன் கருதித் தண்ணீர்ப் பந்தல் போன்ற அறஞ் செய்தல், வருவோர்க்கெல்லாம் விருந்திட்டு உபசரித்தல், இசை நாடகம் போன்ற கலைகளைப் போற்றி மகிழ்தல் போன்ற பலவும் விழாக்கள் நல்கும் பயன்களாகும் இவ்வாறான பெருஞ்சிறப்புக்கள் பலவற்றை நல்கும் பங்குனி உத்திரத் திருநாளை, பக்தியும் பண்பாடும் மிக்க தமிழ்மக்கள் சிறப்புற நிகழ்த்தி திருவருள்பெற்று நீடு இனிது வாழ்வார்களாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருச்சிராப்பள்ளி வானொலிநிலையம் நிகழ்த்திவரும் குறள்நெறியில் "தனக்குவமை இல்லாதான்' என்ற குறள்பற்றி

வழங்கிய

# அருளுரை

9—9—1980

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய் தந்துரைத்த — நூன்முறையை
வந்திக்க சென்னி;வாய் வாழ்த்துக; நன்னெஞ்சம்
சிந்திக்க; கேட்க செவி"

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் தாம் கூறும் ஒவ்வொரு பொருளையும் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வலியுறுத்திக் கூறும் இயல்புடையவர். கல்வி கற்றால் வாழ்வில் உயரலாம் என்பது உடன்பாடு. கல்லாவிட்டால் உயரமுடியாது என்று எச்சரிப்பது எதிர்மறை 'கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ஆகிய நான்கு குறட்பாக்களும் இறைவனை வணங்குவதால் உயிர்கள் எய்தும் நன்மைகளைக் குறிக்கின்றன இதனுள் மூன்றாம் குறட்பாவாகிய 'மலர்மிசை ஏகினான்' என்ற பாடலால் இவ்வுலகில் நீடுவாழ்தலையும், ஆறாம் பாடலாகிய 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்பதனால் வீட்டுலகில் நீடுவாழ்தலையும் ஆகிய இன்ப ஆக்கத்தை உடன்பாட்டால் வள்ளுவர் குறிக்கின்றார். இடைநின்ற நான்காம் பாடலாகிய 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்ற குறட்பாவால் 'யாண்டும் இடும்பை இல' என்றும் ஐந்தாம் பாடலால் 'இருள்சேர் இருவினையும் சேரா' எனவும் எதிர்மறை முகத்தான் துன்ப நீக்கம் கூறியிருக்கின்றார். இன்று நாம் சிந்திக்க இருக்கின்ற குறளிலும் எதிர்மறையிலேயே ஒரு கருத்தைக் குறிப்பிடுகின்றார்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

இங்கு இறைவற்கு, 'தனக்கு உவமை இல்லாதான்' என்ற ஒரு பெயரைத் தருகின்றார். இதிலும் இறைவனது தலையாய ஒருதன்மை விளங்குகின்றது. இங்கு உவமை என்பதற்குப் பொருள் 'ஒப்பு' என்பதேயாகும். இறைவனுக்கு ஒப்பாக இரண்டாவது ஒரு பொருளில்லை என்பதைக் கூறுமுகத்தால் இறைவன் ஒருவனே அன்றிப் பலரில்லை என்பதை இதனால் விளக்குகிறார். இறைவன் ஒருவனே ஆதல்பற்றி அவனை உபநிடதங்கள் 'ஏகன்' எனக்குறிக்கும். தமிழில் இது 'ஒருவன்' என்று சொல்லப்படும். மாணிக்கவாசகர் இறைவனை 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்கிறார்.

எனவே உயிர்கள் அவனது திருவடியை அடைந்து பயனுறும் என்பதைத் 'தாள்சேர்ந்தார்' என்றதனால் குறிக்கின்றார். திருவடி என்பது இறைவனது ஞானமாகிய அறிவையும் கிரியையாகிய செயலையும் குறிக்கும். நிறை ஞானத்தையும் அதனால் விளையும் செயலாற்றலையும்திருவடியைப்பற்றுவதன்மூலம் பெறமுடியும் என்பது குறிப்பு. இவ்விடத்தில் அவர் கூறும் பயன், 'மனக்கவலையை மாற்றிக்கொள்ளுதலேயாகும். மனத்துன்பமே மனக்கவலை எனப்படும். உடலில் வருகின்ற ஊறுகளைத் துன்பம் என்கின்றோம். மனத்தில் வரும் துன்பங்களைக் கவலை எனக்குறிக்கின்றோம். உலகில் மனக் கவலை இல்லாதவரே இல்லை எனலாம். கூழுக்கு உப்பில்லை என் பார்க்கும் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பவர்க்கும் உண்டாகின்ற கவலை ஒன்றே எனப் பழம்பாடல் ஒன்று கூறும். அப்பாடல்:

"பாலுக்குச் சர்க்கரை யில்லைஎன் பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போடஉப் பில்லையென் பார்க்குமுட் குத்தித்தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென் பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை யில்லையென் பார்க்கும் விசனமொன்றே."

அதனால் கவலை என்பது அவரவர்கள் தரத்துக்குத் தக்கவாறு இருக்கவே செய்கின்றது. யாவரிடத்தும் உள்ளதாகிய இக்கவலையை நீக்கிக் கொள்ள முயலாதவர் ஒருவரும் இல்லை. கவலையை விரைவில் நீக்க வேண்டும். முற்றிலும் நீக்கிக்கொள்ள வேண்டும் என்று கருதி அதன் பொருட்டு மக்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் பலப்பல. ஆனால் அம்முயற்சிகள் யாவும் அவர்கள் கருதிய பயனைத் தருகின்றனவா என்பது ஐயப்பாடே.

இறைவனுடைய திருவடியைப் பற்றுக் கோடாகக் கொண்டவர்கள் கவலையற்றிருக்கின்றார்கள் என்பதை ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்கள், வானம் துளங்கினும் மண் கம்பமாகினும் மால்வரையும் தானம் துளங்கித் தலைதடுமாறினும் தண் கடலும் மீனம்படினும் விரிசுடர் வீழினும் கவலையற்றிருப்பார்கள் என வரும் அப்பர் திருமொழி போன்றவற்றால் அறியலாம். எல்லாம் இறை செயலே என்று உரைக்கின்ற தெளிவான உணர்வுடையவர்கள் உள்ளத்தைத் துன்பங்கள் வந்து பற்றுதல் இல்லை. அதனால் மனக் கவலையை நீக்கிக் கொள்ளுதற்கு - நீங்குவதற்கு இறைவன் திருவடிகளைப் பற்றுவதைத்தவிர வேறுவழி இல்லை. இதுபற்றித்தான் திருவள்ளுவர் 'தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு மனக்கவலை மாற்றலாம' என உடன்பாட்டில் கூறாமல், தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது என எதிர்மறையில் வைத்து வலியுறுத்திக் கூறினார். இதனையே நமது ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தரும் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதபெருமானைக் குறிப்பிடும்போது "மனக்கவலை நீக்குகின்ற தென்மதுரை நின்மலன்" என்கின்றார்.

"உனக்குப் பணிசெய்ய உன்தன்னை எந்நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா — மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநாதா"

எனவரும் இப்பாடலில் 'உனக்குப்பணி செய்ய' என்பதால் உடலால் செய்யும் பணியினையும், 'எந்நாளும் நினைக்க' என்பதால் மனத்தால் நினைத்தலையும் குறிப்பிட்டருளுகின்றார். 'உனக்குப் பணி செய்ய' என்னும் தொடரில் வாக்கால் துதித்து வழிபாடாற்றும் பணியினையும் இனம்கருதி அடக்கிக் கொண்டு மனம்வாக்குக்காயம் எனும்மூன்றினாலும் இறைவனுக்குப்பணி செய்வதே மனக்கவலை நீக்க வழியாகும் என்று இப்பாட்டிற்குப் பொருள் காண்பது பொருத்தமுடைத்தாகும்.

எனவே அனைவரும் திருவள்ளுவர் காட்டிய இக் குறள் நெறியில் இறைவனது திருத்தாள் பற்றி மனக்கவலை நீங்கி மகிழ்வுடன் வாழ்வார்களாக!

# மயிலை ஸ்ரீ கற்பகாம்பிகைப் பதிகம்

பூரணி, மனோன்மணி, தயாபரி, பராபரி,
புராதனி தராதலமெலாம்
பொற்புடன் அளித்தசிவ சத்தி, இம வான்உதவு
புத்ரி, மகமாயி யென்றே
சீரணி தமிழ்க்கவிதை செப்பிமுறை யிடுவதுன்
செவிதனக் கேறவிலையோ
தேகியென் றாலும்உனக் கியவகை யில்லையோ
தீனரட் சகியல்லவோ
ஆருல கினிற்பெற்ற தாயன்றி மக்கள்தமை
ஆதரிப் பவர்கள்சொல்லாய்
அன்னையே இன்னம் பராமுகம் பண்ணாமல்
அடியேனை ரட்சிகண்டாய்
மேருவை வளைத்தவன் இடத்தில்வளர் அமுதமே
விரிபொழில் திருமயிலை வாழ்
விரைமலர்க் குழல்வல்லி மறைமலர்ப் பதவல்லி
விமலிகற் பகவல்லியே.

---

## அட்டைப்பட விளக்கம்

தமிழகச் சிவாலயங்களில் பெரும்பாலும் பங்குனி மற்றும் சித்திரைத்திங்களில் பத்துநாள் பெருவிழா நடைபெறுவது வழக்கம். இவை சிறப்பாகப் பௌர்ணமிநாளில் நிறைவுறும். பங்குனித்திங்கள் பௌர்ணமிநாளில் உத்திர விண்மீன் இணைந்துவரும் நாளன்று பங்குனி உத்திரப் பெருவிழாக் கொண்டாடப்பெறுவது வழக்கமாகும். இவ்விழா தருமையாதீன அருளாட்சிக்கு உட்பட்ட திருக்கோயில்களாகிய வேளூர். அருள்மிகு தையல்நாயகி உடனுய அருள்மிகு வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்திலும், திருபுவனம், அருள்மிகு அறம்வளர்த்தநாயகி உடனுய அருள்மிகு கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்திலும். பேரளம் அருள்மிகு பவானியம்மை உடனுய அருள்மிகு சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்திலும் சிறப்பாக நடைபெறுகிறது. மற்றும் மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலிலும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டுவருகிறது. இதனை நினைவுபடுத்தும் வகையில் மயிலை ஸ்ரீ கற்பகாம்பிகை அம்பாளின் திருவுருவம் இவ்விதழின் அட்டைப் படத்தில் காட்சிதருகிறது.

---

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

## மேலையூர் ( கிளை )

**உழவாரப்பணி** 1—3—81 அன்று ஞாயிறு காலை 8 மணிக்கு ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத்தின் சார்பில் பணிமன்ற உறுப்பினர்களான, திரு. இரா. இராஜசேகரன், திரு. வேலுச்சாமி சுதந்திரன், திரு. C. லோகநாதன், திரு. ப. பாலகிருஷ்ணன், திரு. P. இராஜேந்திரன் ஆகியோரும் பூம்புகார் கல்லூரி மாணவர்கள் 5 பேரும், சீனிவாசா மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 15 பேரும், மேலையூர் அருள்மிகு பிரியாவிடங்கேஸ்வரர் ஆலயத்தில் உழவாரப்பணிபுரிந்து கோயிலைத் தூய்மை செய்தனர்.

**உறுப்பினர் தேர்வு** 6—3—81 அன்று வெள்ளி இரவு 7 மணிக்கு வழிபாட்டுக்குப் பின்பொறுப்பாளர் தேர்வு நடைபெற்றது. மேலையூர் கிளையின் சார்பாக, தலைவராகத் திரு. இரா. இராஜசேகரன் B.SC. B. L. அவர்களும், துணைத் தலைவர்களாக, திருவாளர்கள், அரு. இலக்குவன் M. A அவர்கள், M. சிங்காரம் பிள்ளை அவர்கள், N. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். செயலாளராக, திரு. தி. செயபாலன் M. A. B. Ed ( அமைப்பு ) அவர்களும், திரு. C. லோகநாதன் M. A. B. Ed ( பணி ) அவர்களும், திரு. A. வேலுச்சாமி சுதந்திரன் M. A (வழிபாடு) அவர்களும், பொருளாளராகத் திரு. V. ராமச்சந்திரன் M. A. B. Ed அவர்களும் இணைச் செயலாளர்களாகத் திரு. P. இராசேந்திரன், B. A அவர்களும், திரு. G. தட்சிணமூர்த்தி M. A. அவர்களும், திரு. மா. இராமலிங்கம் M. A. அவர்களும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

---

## திருக்குவளையில் நெல் மகோற்சவம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை என்னும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 17—2—81 செவ்வாய்க்கிழமை முதல் 21—2—81 சனிக்கிழமை வரை நெல் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சப்தவிடங்கத்தலங் கத்தலங்களுள் அவனி விடங்கத் தலமாய் விளங்கும் திருக்கோளிலிப் பதியில் வீற்றிருந்தருளும் எம்பெருமான் ஆலயத்தில் ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்குக் குண்டையூர்க்கிழார் தந்தருளிய நெல் மலையைச் சுவாமிகள் ஆரூருக்கு அட்டித்தருமாறு ஆளிடவேண்டிக் கொண்டபடி, இறைவர் ஆணையால் பூதங்கள் எடுத்துச்சென்றமை முதலிய அற்புத வைபவங்கள் இம்மகோற்சவத்தில் நடைபெற்றன. 20—2—'81 வெள்ளியன்று நெல் மலையை ஆரூருக்கு எடுத்துச் சென்று சேர்ப்பிக்க இறைவர் கட்டளையிடும் உற்சவம் மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றது. திரளான பக்தர்கள் தரிசித்துப் பயன் பெற்றனர்.

# திருஇராமனதீச்சரம், திருப்பயற்றூர், திருச்செங்காட்டங்குடித் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,**

## 1. திருஇராமனதீச்சரம்

இராமர் இராவணனைக்கொன்ற கொலைப்பழிதீரச் சிவபெருமானைப்பூசித்த தலங்களில் இராமேசுவரம், இராமனதீச்சரம் ஆகியன குறிப்பிடத்தக்க தலங்களாகும். அவற்றுள் இராமனதீச்சரம் தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் தாலுகாவில் திருப்புகலூருக்கு அண்மையில் உள்ளது. மாயூரம் - திருவாரூர் புகைவண்டித் தொடரில் நன்னிலம் ரயில்நிலையத்தில் இறங்கி, கிழக்கே 6. கி மீ. சென்று திருப்புகலூரை அடைந்து, அங்கிருந்து தெற்கே திரும்பி முடிகொண்டான் ஆற்றைக்கடந்து 2. கி. மீ. தூரம் சென்றால், இத்தலத்தை அடையலாம். திருக்கண்ணபுரம் என்னும் புகழ்பெற்ற வைணவத் தலம் இவ்வூருக்குமேற்கே உள்ளது நன்னிலத்திலிருந்துதிருப்புகலூர் வரை பஸ்வசதி உண்டு. திருப்புகலூரிலிருந்து இத்தலத்திற்குச் செல்லக் கற்சாலை உள்ளது.

இராமனது, ஈச்சரம் (கோயில்) என்ற சொற்கள் கூடி இராமனதீச்சரம் ஆயிற்று. இத்தலத்தில் இராமர் சிவபெருமானை வழிபட்டு நல்லருள் பெற்றுள்ளார் என்பதை இத்தலப்பெயரே நமக்கு நன்கு உணர்த்தும்.

புகழ்பெற்ற யாத்திரைத் தலமாக விளங்கும் திருஇராமேச்சரம் என்பது பாண்டிநாட்டுத் தலங்களில் ஒன்றாகும்.

சிவபெருமானை விஷ்ணுபூசித்த தலங்களாக விளங்குவன பல. திருவீழிமிழலையில் திருமால் ஆயிரம் தாமரை மலர்களில் ஒன்று குறைந்ததை அறிந்து தன் கமலக்கண்களில் ஒன்றை இடந்து சிவபெருமானுக்கு அணிவித்துச் சக்கராயுதம் பெற்ற வரலாற்றை

சமயஉலகம் அறியும். மற்றும் அவளிவணல்லூர், திருவிடைமருதூர், திருஎறும்பூர், திருஏடகம், கச்சூர், சக்கரப்பள்ளி, சிவபுரம், தலைச் செங்காடு, திருநெல்வேலி, திருமங்கலக்குடி, திருமழபாடி, திருமாணி குழி, திருமாற்பேறு, திருவக்கரை, திருவலம்புரம், திருவாஞ்சியம், திருவாளொளிபுத்தூர் ஆகியதலங்களிலும் திருமால் வழிபட்டுள்ளார் எனத்தலபுராணங்கள் தெரிவிக்கின்றன.

## தலப்பெருமை:

இத்தலம் இராமர் வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடையது. இராமர் இத்தலத்தை வழிபடவந்தபோது நந்திதேவர் உள்ளே செல்லத்தடுத்ததாகவும், அம்பிகை அவர்மீது கருணைகொண்டு அனுமதித்ததாகவும், அதனால் இராமநந்தீச்சுவரம் இராமனதீச்சரமாயிற்று என்றும் கூறப்படுகிறது. சோமாஸ்கந்தர் திருவுருவச்சிலையில் நந்தி தேவர் இடம் பெற்றுள்ளார். திருஞானசம்பந்தர் அருளிய திருப் பதிகம் ஒன்றை இத்தலம்பெற்றுள்ளது.

## கோயிலமைப்பு:

கிழக்குநோக்கியசந்நிதி, இரண்டு பிராகாரங்கள் உள்ளன. வெளிப்பிராகாரம் நந்தவனமாக உள்ளது. எதிரே இராமர் தீர்த்தம் விளங்குகிறது. திருக்கோயில் நுழைவாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் கொடிமர விநாயகர் சந்நிதியும் நந்தி பலி பீடங்களும் உள்ளன. அம்பாள்கோயில் தெற்குநோக்கியுள்ளது.

வலமாகவரும்போது கன்னிமூலையில் தலவிநாயகரையும் மேற்கே முருகனையும் கஜலட்சுமியையும் வழிபடலாம். கிழக்கே கால பைரவர் பெரிய திருமேனியோடு விளங்குகிறார். அடுத்து நால்வர், சூரியன் ஆகியோர் விளங்குகின்றனர். கோஷ்டங்களில் தெற்கே சனகாதியருடன் தக்ஷிணாமூர்த்தியும், மேற்கே இருபுறங்களிலும் திருமால் பிரமர் நின்றுவழிபட இலிங்கோற்பவரும், வடக்கே பிரமனும் அடுத்து துர்க்கையும் உள்ளனர். சண்டேசுரர் தனிக்கோயிலில் உள்ளார்.

வலமாகவந்து சுவாமி சந்நிதியை அடைவோம். முன் மண்டபம் இல்லை. மகாமண்டபமும், அடுத்து அர்த்தமண்டபமும், அடுத்து கருப்பக்கிருகமும் உள்ளன. சோழர் காலத்திருப்பணிகளைப் பெற்றுக் கம்பீரமாக விளங்குகிறது கருப்பக்கிருகம்.

மகாமண்டபத்தில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளும் மேடைகள் உள்ளன. திருவுருவங்கள் வேறுதிருக்கோயில்களுக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பில் வைக்கப்பெற்றுள்ளன.

சுவாமிசந்நிதியில் நந்தி பலிபீடங்களை வழிபட்டு துவாரவிநாய கரைத் தரிசித்து அருள்மிகு இராமநாதேசுரரை வழிபடலாம். சுவாமி பெரிய திருவுருவத்தோடு விளங்குகிறார். சிவலிங்கத்தின் பாணம் பேரழகுடையது. தீபாராதனை செய்யும் போது திருஈங்கோய்மலை இறைவர் திருமேனிபோல் கற்பூரஜோதி சிவலிங்கத்தில் பிரதிப்பலிப் பதைக்காணலாம்.

சந்தநன் மலரணி தாழ்சடையன்
தந்த மதத்தவன் தாதையோதான்
அந்தமில் பாடலோன் அழகன் நல்ல
எந்தவன் இராமனது ஈச்சரமே.

என்ற திருஞானசம்பந்தர் பாடலை ஓதி வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடைவோம். அம்பிகை அருள்மிகு சரிவார்குழலி. கருணை பொங்கும் திருவிழிகளோடு காட்சிதருகிறார். தரிசித்து மகிழலாம்.

## மூர்த்திகள்:

இத்தலத்தில் விளங்கும் இறைவன் திருப்பெயர் அருள்மிகு இராம நாதேசுவரர், அம்பிகை திருப்பெயர் சரிவார்குழலி. திருஞானசம் பந்தர் தேவாரத்தில் 'சரிகுழல் இலங்கிய தையல்' என இப் பெயரைக்குறித்துள்ளார். வடமொழில் சூளிகாம்பாள் என்பதாகும். திருஞானசம்பந்தர் இத்தலப்பதிகத்தில் விநாயகர் - முருகன் தாதை எனக்குறிப்பிடுவதால் அவ்விருமூர்த்திகளும் சிறப்புடையராவார். தலமரம் - சண்பகம் தீர்த்தம் - இராமதீர்த்தம்.

## இராமர் வழிபட்ட வரலாறு:

படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களில் அழித் தல், உருத்திரராக விளங்கும் சிவபெருமான் ஒருவனுக்கே உரிய தொழிலாகும். ஏனையோர் அதனைச்செய்யின் பழியுறுவர். கொலைப் பழி தெய்வங்களையும் பற்றும் இயல்பினது. சிவவழிபாடே அப் பழியைப்போக்கும் ஆற்றல் உடையது என்பதைப் புராணவரலாறு கள் பலவும் நமக்கு நன்குணர்த்தும்.

விநாயகர் கயமுகாசுரனைக் கொன்றதால் ஏற்பட்ட கொலைப்பழி தீரத் திருச்செங்காட்டங்குடியில் இறைவனை வழிபட்டார்.

முருகன் சூரபன்மனைக் கொன்ற கொலைக்குற்றம் நீங்கத் திருச் செந்தூரில் சிவபெருமானைப் பூசித்தார்.

அம்பிகை துர்க்கையாக அம்பரன், என்ற அசுரனைக் கொன்ற கொலைக்குற்றம் நீங்க அம்பகரத்தூரில் சிவபிரானைப் பூசித்தாள்.

இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றபழி நீங்க மதுரையில் இறைவனை வழிபட்டான்.

அவ்வாறே இராமர், இராவணனை அழித்த கொலைப்பாவம் நீங்க இராமேசுவரத்திலும் இராமனதீச்சரத்திலும் சிவபெருமானை வழி பட்டார் என்று இத்தலத்தின் சிறப்புக் கூறப்படுகிறது.

## தலப்பதிகச் சிறப்பு:

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய வியாழக்குறிஞ்சித் திருப்பதிகம் ஒன்று உள்ளது விநாயகர், முருகன் இவர்களின் தந்தை என்று பெருமானைப்பாடும் அரியபாடல்கள் இத்திருப்பதிகத்திலுள்ளன காளியின் ஆடல் கண்டுமகிழ்பவன் என்றும், பலியேற்று மகிழ்பவன் எங்கும் நிறைந்தவன் என்றும் இறைவன் பெருமை கூறப்படுகின்றது. அம்பிகை திருப்பெயர் ஆரும் பாடலில் கூறப்பட்டுள்ளது. திருக் கடைக்காப்புச் செய்யுள் மறைந்துள்ளது. இறைவனது அருட்காட்சி யைக்கண்ட திருஞானசம்பந்தர் இறைவனது பெருமைகளையும் திரு மேனியழகையும் அவர் அணிந்துள்ள பல்வகை அணிகலப் பொருள் களையும் இத்திருப்பதிகத்தில் வியந்தும் மகிழ்ந்தும் பாடியுள்ளார்.

## கல்வெட்டுக்கள்:

இத்தலம் திருகண்ணபுரம் கல்வெட்டுக்களில் சேர்த்தே அரசிய லாரால் படியெடுக்கப்பெற்றுள்ளது. ஐந்து கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவன் இராமனதீச்சரமுடையார் எனவழங்கப்பெறுகிறார். குலோத் துங்கசோழன் இக்கோயில் பூசைக்காகவும், அமுதபடிக்காகவும் நிலம் அளித்தான். இந்நிலம் பின்னர் சிவபாதசேகரமங்கலம் என்று வழங்கப்பெற்றது. கோயிலைத் திருப்பணிசெய்தவனும் இவனே. பின்னர் திருமலை தேவமகாராயரின் (சகம் 1397) விக்கிரமாதித்தன் என்னும் அரசகாரியம் பார்ப்பவன் கோயிலைப்பழுது பார்த்திருக்கிறான் பூசைக்கும், அமுதுக்கும் நிலம் அளித்திருக்கின்றான். கோனேரின்மை கண்டான் (யார் என்று அறியக்கூடவில்லை) காலத்தில் அர்ச்சகர்க் குள் உரிமைப்போர் நிகழ்ந்திருக்கின்றது. அதனை நீக்கி, திருமன்னு சோழ பிரமராயனுக்கும் மானவரையனுக்கும் பூசை உரிமைகள் வழங்கப்பெற்றன. தனியூரான தில்லையிலிருந்தமாகேஸ்வரர்களால், இக்கோயில் நிலம் பஞ்சத்தால் விளையாதுபோகவே, இராஜராஜ பாண்டிமண்டலம், வீரசோழமண்டலம், நடுவில்நாடு, ஜெயங் கொண்டசோழமண்டலம் முதலியவற்றில் உள்ள கோயில்களிலிருந்து நெல்லும் கொடுத்துதவும்படி உத்தரவிட்டிருக்கின்றனர். இது கோயில் நிர்வாகத்தின் தனிச் சிறப்பைக் குறிப்பதாகும்.

# 2. திருப்பயற்றூர்

இத்தலம் திருப்பயத்தங்குடி என வழங்கப்பெறுகிறது. தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் தாலூகாவில் உள்ளது. மாயூரம் - காரைக் குடி இருப்புப்பாதையில் விற்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 7 கி மீ. தூரத்திலமைந்துள்ளது. திருவாரூரிலிருந்து கங்களாஞ்சேரி வழியாகத் திருமருகல்செல்லும் பேருந்தில் சென்றால் இத்தலத்தில் இறங்கலாம். பேருந்தில் செல்லுவதே எளிமையாக இத்தலத்தை அடைவதற்குரிய வழியாகும்.

## பெயர்க்காரணம்:

வரி விலக்கின் பொருட்டு வணிகன் ஒருவனது வேண்டுகோளுக்கு இணங்க இத்தலத்து இறைவன் அவனது மிளகு மூட்டைகளைப் பயறு மூட்டைகளாக மாற்றித் தந்தமையால் இத்தலம் திருப்பயற்றூர் என வழங்கப்பெறலாயிற்று எனச் செவிவழிச்செய்தி கூறுகிறது.

பயறு, உளுந்து, வரகு, தினை முதலியவற்றால் ஊர்ப்பெயர் வழங்குவதைப் பயற்றூர், உளுந்தூர், வரகூர், தினைநகர் முதலிய பெயர் வழக்குகளால் நாம் அறியலாம். அம்முறையில் புஞ்சைப்பயிர்களாகப் பயறு வகைகள் மிகுதியாக விளையும் காரணத்தினால் இவ்வூர் பயற்றூர் என வழங்கியது எனக்கருதலாம்.

## தலப்பெருமை:

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த அழகியதொரு திருநேரிசைத் திருப்பதிகத்தைப்பெற்றதலம். கண்ணோயுள்ளவர் இத்திருத்தலத்தை அடைந்து கருணை தீர்த்தத்தில் மூழ்கி அருள்மிகு காவியங்கண்ணியோடு உடனுறையும் அருள்மிகு திருப்பயற்றுநாதரை வழிபடின் கண்ணோய் நீங்கப்பெறுவர். பஞ்சநதவாணன் என்பவன் அவ்வாறேசெய்து தனக்கு உற்ற கண்ணோய்நீங்கப்பெற்று நிலம் அளித்துள்ளதை இத்தலக் கல்வெட்டொன்றாலும் அறியலாம்.

## இத்தலத்தைச் சூழவுள்ள தலங்கள்:

கிழக்கே-திருமாலயன் பொய்கை. தெற்கே - வைப்பூர். வடக்கே - திருச்செங்காட்டங்குடி தென்மேற்கே - விற்குடி ஆகிய தலங்கள் உள்ளன.

## கோயிலமைப்பு:

கோயில் கிழக்குநோக்கி உள்ளது. கிழக்கே சுவாமி சந்நிதியிலும் தெற்கே அம்பாள் சந்நிதியிலும் வாயில்கள் உள்ளன. எதிரே கருணைதீர்த்தம் அமைந்துள்ளது. புத்தம்புதிய திருப்பணிகளைப் பெற்றுப் பொலிவுடன் இக்கோயில் விளங்குகிறது. பஞ்சமூர்த்திகள் அமைந்த கீழைக் கோபுரப் பிரதானவாயிலின் வழியே கோயிலின் உள்ளே செல்வோம். முதலில் கொடிமர விநாயகர் காட்சி தருகிறார். அடுத்து பலி பீடங்கள் உள்ளன. தரிசித்துக் கோயிலை வலமாக வருவோம். கன்னிமூலையில் தலவிநாயகர் எழுந்தருளியுள்ளார். அடுத்து முருகன் விசுவநாதர் விசாலாட்சி கஜலட்சுமி கோயில்கள் உள்ளன. வடக்கே வீரமாகாளி கோயிலும் சண்டேசர்கோயிலும் உள்ளன. ஈசான திசையில் பழநியாண்டவர் எழுந்தருளிவிளங்கும் மண்டபம் உள்ளது. கிழக்கே நவக்கிரகங்கள், பைரவர், சமயாசாரியர் திருவுருவங்கள் உள்ளன. கர்ப்பகிருகக் கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்திவிளங்குகிறார். அவர்சந்நிதியில் சிலந்தி என்னும் தலமரம் உள்ளது. கிழக்கே சூரியன் பைரவர் நவக்கிரகங்கள் அப்பர் சம்பந்தர் திருவுருவங்கள் உள்ளன.

முன்மண்டபத்தில் அம்பாள் சந்நிதி தெற்குநோக்கி விளங்குகிறது. தலத்திருப்பதிகம் சலவைக்கல்லில் வெட்டி வைக்கப்பட்டுள்ளது. அடுத்து மகாமண்டபம் உள்ளது. பஞ்சமூர்த்திகள் இங்கு விளங்குகின்றனர். சுவாமிசந்நிதியில் துவாரவிநாயகரும் நந்திதேவரும் எழுந்தருளியுள்ளனர், அர்த்தமண்டபம்; அதை அடுத்துக் கருப்பக்கிருகம்; சுவாமிதிருவுரு மிகப்பழமையானது என்பதைத் தரிசிக்கும்பொழுது உணரலாம். ஆவுடையார் நாற்கோணவடிவில் உள்ளது.

சுவாமி அருள்மிகு திருப்பயற்றுநாதரைத் தலத்திருப்பதிகப் பாடல்களை ஓதி வழிபடுவோம்.

> பார்த்தனுக்கு அருளும்வைத்தார் பாம்பரை ஆடவைத்தார்
> சாத்தனை மகனாவைத்தார் சாமுண்டி சாமவேதம்
> கூத்தொடும் பாடவைத்தார் கோளரா மதியம்நல்ல
> தீர்த்தமும் சடையில் வைத்தார் திருப்பயற் றூரனாரே.

என்பது இத்தலத் தேவாரம். வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடைவோம்,

அம்மையார் அருள்மிகு காவியங்கண்ணி அழகிய திருவுருவோடு காட்சி தருகிறார்.

ஆவியாய் அவியுமாகி அருக்கமாய்ப் பெருக்கமாகி
பாவியாய்ப் பாவந்தீர்க்கும் பரமனுய்ப் பிரமனுகிக்
காவியங் கண்ணளாகிக் கடல்வண்ண மாகிநின்ற
தேவியைப் பாகம்வைத்தார் திருப்பயற்றூர ஞரே.

என்ற தேவாரத் திருப்பாடலில் அம்பிகை குறிப்பிடப்படுகிருர்.

## மூர்த்திகள்:

இறைவன் திருப்பெயர் அருள்மிகு திருபயற்றுநாதர். இப்பெயர் இத்தலத் தேவாரத்தில் திருப்பயற்றூரனுர் எனப் பாடல்தோறும் குறிப்பிடப்படுகிறது வடமொழில் முத்தபுரீசுவரர் என வழங்கப் பெறுகிருர். அம்பிகை திருப்பெயர் காவியங்கண்ணி வடமொழியில் நேத்திராம்பிகை என வழங்குகின்றனர். தேவாரத்தில் காவியங் கண்ணி என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. 'சாமுண்டி சாமவேதம் கூத்தொடும் பாடவைத்தார்' என்பதற்கேற்ப இக்கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் வீரமாகாளி கோயில்உள்ளது தலமரம் - சிலந்தி. தீர்த்தம் - கருணுதீர்த்தம்.

## புராண வரலாறுகள்

இத்தலத்தில் பயிரவ முனிவர் பெருமாணைப் பூசித்து அருள்பெற்றுள்ளார். முன்னொருகாலத்தில் சிவபெருமானிடம் பேரன்புபூண்ட வணிகன் ஒருவன் மிளகு வாணிபம் செய்துவந்தான். அவன் வாணிகம் செய்யக் கடற்கரையைநோக்கி மிளகு மூட்டைகள் சில வற்றை இத்தலத்தின் வழியே எடுத்துவந்தான். அக்காலத்தில் அங்கேஇருந்த சாவடியில் மிளகு மூட்டைகளுக்குச் சுங்கவரி விதிக்கப்பட்டுவந்தது. வணிகன் வாங்கிக்கொண்டுவந்த அம்மிளகு மூட்டைகளை வரியின்றி விற்பனை செய்தால்தான் அவனுக்கு நட்டம் ஏற்படாமல் இருக்கும் என்றநிலை ஏற்பட்டது. பெருமானிடம் முறையிட்டான், தான்கொண்டுவந்த மூட்டைகளைச் சுங்கச் சாவடியைக் கடக்கும்வரை பயறு மூட்டைகளாக மாற்றித்தர வேண்டினுன்.

இறைவன் அவனது கனவில் தோன்றி, 'நீ விரும்பியவாறே மிளகுப்பொதிகளைப் பயறுமூட்டைகளாக மாற்றித்தந்தோம்; உனக்கு அருள்புரிந்த நினைவாக இவ்வூர் பயற்றூர் என்றும், எம்பெயர் பயற்று நாதர் என்றும் வழங்குவதாக' என்றும் திருவருள்புரிந்து மறைந்தார். அன்றுமுதல் ஊர் திருப்பயற்றூர் எனவும், இறைவன் திருப்பெயர் திருப்பயற்றுநாதர் எனவும் வழங்கப்பெறலாயின. வணிகனும் மனம் மகிழ்ந்துசென்ருன். இறைவன் அருள்புரிந்தபடி மிளகு மூட்டைகள் சுங்கச்சாவடி கடக்கும்வரை பயறு மூட்டைகளாக இருந்து, மீண்டும் மிளகு மூட்டைகளாயின. வணிகன் இறைவனருளால் மிக்க இலாபம் பெற்று இன்புற்ருன்.

பஞ்சநதவாணன் என்பவன் கண்ணோய் நீங்குவதற்காக இத்தலத்து இறைவனை வேண்டினான். இறைவனருளால் கண்ணோய் நீங்கி நலமுற்றான். கண்ணொளிதந்த பெருமானுக்குக் காணிக்கையாக நிலம்விட்டு அதனை இக்கோயில் கல்வெட்டில் குறித்துள்ளான்.

## திருப்பதிகச் சிறப்பு :

இத்தலத்து இறைவனைத் திருநாவுக்கரசர் திருநேரிசைத் திருப்பதிகம் ஒன்றால் பாடித் துதித்துள்ளார், இத்திருப்பதிகம் நான்காம் திருமுறையில் உள்ளது.

உமையம்மை அஞ்சுமாறு இறைவன் யானையை உரித்துப் போர்த்ததும் மலையைச் சிலையாகக்கொண்டு திரிபுரங்களை எரித்ததும், அருச்சுனனுக்கு அருள்பாலித்ததும், இராவணனை அடர்த்துப் பின் அவனுக்கு அருள்புரிந்ததுமாகிய புராண வரலாறுகள் கூறப்படுகின்றன ஐயனாரைத் தம் திருமகனாராகப் பெற்றதும், காளியைத் திருக்கூத்தாடச்செய்ததும் குறிக்கப்படுகின்றன. இப்பெருமான் மும்மூர்த்திகளாக இருந்து முத்தொழில்செய்வதும், அட்டதிக்குப்பாலகர்களாக இருந்து உலகைக் காப்பதும், எல்லாமாய் விளங்குவதும், தம்மைநினைந்து உருகுவார் உள்ளத்தில் சிவமாய் விளங்கும் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. சித்தாந்தசாத்திரக் கருத்துக்கள், யோகநூற் குறிப்புக்கள், புராண வரலாறுகள், இறைவனது பேரருளை விளக்கும் வரலாறுகள் பலவற்றைக்கொண்டது இத்திருப்பதிகம்.

இத்தலத்தைக்குறிக்கும் பிறிதொரு தேவாரப்பாடல் ஆரும் திருமுறையில் ஏழாம் பதிகத்தின் ஐந்தாம் பாடலாகும். இராமலிங்க அடிகள்,

> " மயற்றூர் பறித்த மனத்துள் விளைந்த
> பயற்றூர் திசையெம் பரனே "

என்று பாடியுள்ளார்.

வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள் எழுதிய தலவரலாறு வெளியிடப்பெற்றுள்ளது.

## கல்வெட்டுகள் :

கல்வெட்டில் கூறப்பெற்ற செய்திகள் :— இத்திருப்பயற்றூரில் பஞ்சநதவாணன் என்பவனுக்கு நோயால் வருந்திய கண் நன்றாகும்படி, அவன் சாதியார் அறுநூறுகாசுக்குத் திருச்சிற்றம்பலமுடையானுக்குச் சொந்தமாயுள்ள கிடங்கு நிலம் அரைமாவாங்கிச் சிவபெருமானுக்கு உரிய நிலமாக விட்டுள்ளனர்.

# 3. திருச்செங்காட்டங்குடி

சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்று விளங்கும் சிறப்புடைய சிறந்த சிவதலங்களில் ஒன்று திருச்செங்காட்டங்குடி. சிறுத்தொண்டர்க்கு இறைவன் அருள்புரிந்த தலம் இது. இத்தலம் தஞ்சைமாவட்டத்தில். நன்னிலம் வட்டத்திலுள்ளது. மாயூரம் - காரைக்குடி புகைவண்டித் தொடரில் நன்னிலம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 9 கி. மீ தூரத்தில் உள்ளது. நன்னிலத்திலிருந்து (6. கி. மீ.) திருப்புகலூரை அடைந்து தெற்கேஉள்ள முடிகொண்டான் ஆற்றைக்கடந்து திருக்கண்ணபுரம் (1½ கி. மீ,) சென்று, அங்கிருந்து கிழக்கே (1½ கி. மீ ) சென்றால் இவ்வூரை அடையலாம். கற்சாலை வசதி உள்ளது. இவ்வழியில் திருப்புகலூர்வரை பேருந்துவசதி உண்டு. திருமருகலிருந்து திருவாரூர் செல்லும் பேருந்துகள் இவ்வூர் வழியே செல்வதால் பேருந்துகளில் வருவோர் திருமருகல் அல்லது திருவாரூர் சென்று அங்கிருந்து திருச்செங்காட்டாங்குடிக்குவரலாம். இத்தலம், திருப்புகலூர் வேளாகுறிச்சி ஆதீனத்தின் பரிபாலனத்தில் உள்ளது.

## தலப்பெருமை:

விநாயகர் கயமுகாசுரனைக் கொன்ற கொலைப்பழிதீர வழிபட்ட தலம் ஆதலால் கோயில் கணபதீச்சரம் எனவும், அவ்வசுரனது குருதிபடிந்து செங்காடாயினமையால் ஊர் செங்காட்டாங்குடி எனவும் வழங்கப்பெறுகின்றன. வெண்காடு பைங்காடு என்பன போல இவ்வூர் செந்நிறக்காடுகள் சூழ்ந்திருந்தமையால் செங்காடு என வழங்கப்பட்டதாகலாம். இறைவன் பைரவ வேடங்கொண்டு சிறுத்தொண்ட நாயனரிடம் பிள்ளைக்கறியமுது கேட்டுவந்து, அமுதளித்த சிறுத்தொண்டர், அவருடைய மனைவியார், திருவெண்காட்டுநங்கை, மகனர் சீராளதேவர், பணிப்பெண் சந்தனநங்கை ஆகியோர்க்கு அருள்புரிந்த அற்புத வரலாறு நிகழ்ந்த தலம். தலத்திலுள்ள உத்தராபதீசுவரரும் தலமரமாகிய திருவாத்தியும் மிக்க பெருமையும் பழமையும் உடையன. பல்லவர்கள்காலத் தெய்விகக் கலைச்சிற்பங்களாகிய நவதாண்டவமூர்த்திகள் துவாரபாலகர்கள் ஆகிய திருவுருவங்கள் இத்திருக்கோயிலில் உள்ளன. சிறுத்தொண்டர் பல்லவ மன்னனின் சேனாதிபதியாக வாதாபிசென்று சாளுக்கியரோடு போர்செய்து வாகை சூடிவந்தபோது கொண்டுவந்த வாதாபி விநாயகர் இக்கோயிலில் விளங்குகிறார். ஆண்டுதோறும் சித்திரைப் பரணியில் சிறுத்தொண்டர் அளித்த பிள்ளைக்கறியமுதை உண்ணப் பெருமான் உத்தராபதீசுவரராக எழுந்தருளிவந்த ஐதிகவிழா மக்கள் மனத்தைக் கவரும் தெய்விக விழாவாக நிகழ்கிறது.

**கோயிலமைப்பு;**

திருக்கோயிலை நடுவாக வைத்து நான்கு வீதிகளைக் கொண்டது தலம். கிழக்குப் பார்த்த சந்நிதி. கோயிலின் வாயிலில் சத்தியபுஷ்கரிணி தீர்த்தம் உள்ளது. தீர்த்தக் கரையில் கீழவீதியில் 'வேண்டும் விநாயகர்' எழுந்தருளியுள்ளார். விநாயகரை வழிபட்டு வீதிவலம் வருவோம், தெற்குவீதியில் கோயில் அலுவலகம் உள்ளது தென் மேற்கு மூலையில் சூரியபுஷ்கரிணி தீர்த்தமும் மேற்கே சிறுத்தொண்டர் திருமடமும் உள்ளன. இத்திருமடமே சிறுத்தொண்டர் வாழ்ந்த இடம் எனக்கூறப்படுகிறது ஆண்டுதோறும் இங்குதான் உத்தராபதீசுவரர் சிறுத்தொண்டர் அளித்த பிள்ளைக்கறியமுது செய்த விழா நிகழ்கிறது. திருமடத்தை அடுத்துச் சிறுத்தொண்டர் கோயில் உள்ளது இங்கு உத்தராபதீசுவரர், சிறுத்தொண்டர், அன்னம் பரிமாறும் நிலையில் திருவெண்காட்டுநங்கை. ஐயடிகள் காடவர்கோன் திருவுருவங்கள் உள்ளன. நான்குவீதிகளின் நான்கு மூலைகளிலும் விநாயகர் கோயில்கள் உள்ளன. திருவீதியை வலம் வந்து திருக்கோயிலை அடைவோம்.

இத்திருக்கோயில் அண்மையில் திருப்பணிகள் செய்யப்பெற்றுப் புதுப்பொலிவோடு விளங்குகிறது. ஐந்துநிலைகளோடு கூடிய இராஜ கோபுரம் கோயிலை அணிசெய்கிறது, திருச்சுற்றுக்கள் (பிராகாரங்கள்) உள்ளன. வெளிப்பிராகாரத்தில் அம்பாள்கோயில் உள்ளது. திருக் கோயிலுக்குத் தெற்கே ஒருவாயிலும் மேற்கே ஒருவாயிலும் உள்ளன. வடக்குத் திருச்சுற்றில் வருணன் வழிபட்ட சமுத்திரராசலிங்கம் உள்ளது. அடுத்து அம்பாள்கோயிலின் கருப்பகிருகமும் சண்டிகேசுவரி கோயிலும் உள்ளன.

வலமாகவந்து கொடிமரம், நந்தி, பலிபீடங்களை வணங்கித் திருக் கோயிலின் மகாமண்டபத்தை அடைவோம், அருள்மிகு வாய்த்த திருக்குழலம்மை சந்நிதி தெற்குநோக்கி உள்ளது. அருகில் திருப் பள்ளியறையும், கல்யாண மண்டபமும் உள்ளன.

இரண்டாம் கோபுரத்தைக்கடந்து செல்லும்போது குடவறையில் அதிகாரநந்திகேசுவரரைத் தரிசிக்கலாம். உட்பிராகாரத்தின் கிழக்குப் பகுதியில் உத்தராபதீசுவரர் சந்நிதிக்கு எதிரே பிட்சாடனர், சிறுத்தொண்டர், திருவெண்காட்டுநங்கை, சீராளதேவர், சந்தன நங்கை ஆகியோர் திருவுருவங்களைக் காணலாம்.

தெற்குப் பிராகாரத்தின் திருமாளிகைப்பத்தியில் அறுபத்துமூவர் உள்ளனர். அடுத்துப் பிரமன், அர்த்தநாரீசுவரர், சமயாசாரியர் விளங்குகின்றனர். அடுத்துச் சங்கநிதி பதுமநிதிகள் ஏந்தியபூதங்கள்

உள்ளன. கன்னிமூலையில் தனிக்கோயிலில் வாதாபிவிநாயகர் எழுந்தருளியுள்ளார். மேலைத் திருமாளிகைப்பத்தியில் ஞானசம்பந்தர் விநாயகர், சத்யாஷாடலிங்கம் மற்றும் பல லிங்கங்கள் உள்ளன. அடுத்து முருகன் கோயிலும் மகாலட்சுமி கோயிலும் உள்ளன. வடக்குத் திருமாளிகைப்பத்தியில் வாயுமூலையில் வசந்தமண்டபம் உள்ளது, அடுத்து சிற்பச் சிறப்புவாய்ந்த நவதாண்டவமூர்த்திகள் விளங்குகின்றனர். ஈசான திசையில் நடராசசபை உள்ளது. கிழக்குப் பிராகாரத்தில் நவக்கிரகங்கள், பைரவர், சூரியன் உள்ளனர். கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோற்பவர். வடக்கே பிர்மா உள்ளனர்.

வலமாகவந்து உள்மண்டபத்தை அடைவோம். இம்மண்டபத்தின் உட்பகுதியில் உற்சவமூர்த்திகள் விளங்குகின்றனர். சுவாமி கருவறையில் திருவணுக்கன் திருவாயிலில் கலைச் சிறப்புடைய துவாரபாலகர்கள் உள்ளனர். வழிபட்டுச் சுவாமி அருள்மிகு கணபதீச்சரமுடையபெருமானைத் தரிசிப்போம். மூலமூர்த்தியாகிய இப்பெருமானை வழிபடும்போது நம்மை நாம் மறப்போம்.

> பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்றாட்டி
> நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
> சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங் குடியதனுள்
> காலினால் கூற்றுதைத்தான் கணபதீச் சரத்தானே.

என்ற திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பாடலை ஓதி வழிபட்டு, சுவாமி சந்நிதியிலிருந்து தெற்குநோக்கி உத்தராபதீசுவரர் சந்நிதியை அடைவோம். அச்சமும் அன்பும் இவர் சந்நிதியில் நமக்கு உண்டாவதை உணரலாம் நின்ற திருக்கோலத்தில்விளங்கும் இம்மூர்த்திதான் அன்று சிறுத்தொண்டர் இல்லத்திற்குப் பிள்ளைக்கறி கேட்டுவந்தவர். இவர் எழுந்தருளியிருந்த திருவாத்திமரம் சந்நிதியில் உள்ளது. பன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இத்தலமரத்தைத் தரிசித்து அமர்ந்து இயன்றவரை ஐந்தெழுத்தோதி எழுந்து அம்பாள் சந்நிதியை அடைவோம்.

அர்த்தமண்டபம் மகாமண்டபங்களோடு விளங்குகின்றது அம்பிகைகோயில். கூந்தலழகை உடையவள் என்ற பொருத்தமான பொருளில் அம்மையின் திருப்பெயர் வாய்த்த திருக்குழலம்மை என வழங்கப்பெறுகிறது.

> கங்காட்டும்கரம் களத்துக் கறைகாட்டும் பிறைமவுலிக்கடவுள்மாலோடு
> அங்காட்டு நான்முகனை ஐங்கரனை அறுமுகனை அளித்த பேதை
> சங்காட்டும் புனற்கரஞ்சேர்க் காவேரி வளங்காட்டும் தமிழ்நன்னாட்டில்
> செங்காட்டங் குடிவாய்ந்த திருக்குழலி உபயபதம் சென்னிசேர்ப்பாம்.

என்ற தலபுராணப்பாடலை ஓதி வழிபடுவோம்.

**மூர்த்திகள் :**



வாதாபி விநாயகர்

விநாயகர், வேண்டும்விநாயகர். இவர் திருக்கோயில் கீழவீதியில் உள்ளது. வாதாபிவிநாயகர் சிறுத்தொண்டரால் வாதாபியிலிருந்து கொண்டுவரப்பெற்றவர். இவர் உட்பிராகாரத்தில் தென்மேற்குத் திசையில் தனிக்கோயிலில் எழுந்தருளியுள்ளார். இறைவன் திருப் பெயர் - அருள்மிகு கணபதீச்சுரர். இவர் தலத்திற்கேற்ற பெயர் களால் மந்திரபுரீசர், சக்திபுரீசர், பிரமபுரீசர், இந்திரபுரீசர், அத்திவன நாதர், பாஸ்கரபுரீசர், சமுத்திரபுரீசர் எனவும் வழங்கப்பெறுகிருர். கல்வெட்டுக்களில் கணபதீச்சரமுடைய மகாதேவர் எனக் குறிக்கப் படுகின்ருர். சிறப்புத்திருவீதிஉலாநாதர்-உத்தராபதீஸ்வரர். உத்தரம்

வடக்கு. வடநாட்டுப் பைரவக்கோலத்தில் வந்த பெருமானாதலின் இப்பெயரோடு வழங்கப்படுகின்றார். அம்பிகையின் திருப்பெயர் அருள்மிகு வாய்த்ததிருக்குழலம்மை வடமொழியில் சூளிகாம்பாள் என வழங்குகின்றனர். திருமருகல், திருப்புகலூர், இராமனதீச்சரம் முதலிய தலங்களில் உள்ள அம்பிகைகளின் பெயர்களும் இந்தலச் சிறப்பிப்பனவாக உள்ளன ஆதலின் சூளிகாம்பாள் என்ற பெயர் ஏனைய தலங்களின் அம்பிகைகளுக்கும் வழங்குகின்றன. நவ தாண்டவ மூர்த்திகளாகிய புஜங்கலளிதர் கஜசம்ஹாரர், ஊர்த்துவ தாண்டவர், காலசம்ஹாரர், கங்காளர், பிக்ஷாடனர், திரிபுரசம்ஹாரர், பைரவர், உத்தராபதியார் திருவுருவங்கள் சிலைவடிவில் வடக்குப் பிராகாரத்தில் உள்ளன.

## தீர்த்தம் :

இத்தலத்தில் பல தீர்த்தங்கள் உள்ளன. கோயிலுக்குமுன்புறம் உள்ளது சத்தியபுட்கரிணி, சூரியதீர்த்தம், இந்திரதீர்த்தம், அக்னி தீர்த்தம், யமதீர்த்தம், வருணதீர்த்தம், வாயுதீர்த்தம், சந்திர புஷ்கரிணி, சீராளன் குளம் என்பனவும் உள்ளன.

## சிறுத்தொண்டர் வரலாறு :

இத்தலத்தில் மாமரத்திரர்குலத்தில் உதித்தவர். இவர் தம் இயற்பெயர் பரஞ்சோதியார். ஆயுர்வேதக் கலையிலும் வடநூற்கலையிலும் படைக்கலத் தொழிலிலும் வல்லவர். உள்ளம் நிறை கலைத் துறைகள் ஒழிவின்றிப் பயின்றவராதல் சிவன்கழலைப் போற்றுதலே மெய்ந்நெறி எனத்தெளிந்து சிவபெருமானை வழிபட்டும் நாள்தோறும் சிவனடியார்களுக்கு திரு அமுதருத்தியும் திருத்தொண்டு புரிந்து வந்தார். இவருடைய மனைவியார் திருவெண்காட்டுநங்கை, மனையறத்தின் வேராய் விளங்கிக் கணவனாருக்குக் கருத்தொருமித்த மனைவியாய்த் திகழ்ந்தார். அடியார்களுக்குமுன்னால் தான் மிகமிகச் சிறியவன் என எண்ணி நடந்துவந்ததால் பரஞ்சோதியார் சிறுத் தொண்டர் என அழைக்கப்பெற்றார். சிறுத்தொண்டருக்கு அரிய தவப்புதல்வராகச் சீராளதேவர் அவதரித்தார்.

பரஞ்சோதியாரின் படைப்பயிற்சித்திறன் அறிந்த நரசிம்மவர்மப் பல்லவமன்னன் இவரைத்தன் படைத்தளபதியாக்கினான். பல்லவரின் பகைவராக விளங்கிய சாளுக்கியரை முறியடித்தற்பொருட்டு இவரை வடபுலம் அனுப்பினான் மன்னன். பரஞ்சோதியார் படை கொண்டு சென்று பகைவரை வென்று வாதாபியை அழித்து, அங்கிருந்து நிறைந்த செல்வங்களைக் கொண்டுவந்து வேந்தனிடம் சேர்ப்பித்தார். அரசன் சேனாபதியாக விளங்கிய பரஞ்சோதியாரைப் பாராட்டினான்.

அருகில் இருந்த அமைச்சர்கள் இவர் சிவனடியார் என்று சொல்லக் கேட்ட மன்னன், சிவனடியாரைப் பணிகொண்டதற்கு வருந்தி அவரை நிறைந்த நிதிக்குவைகளோடு விடைகொடுத்தனுப்பினன்.

பரஞ்சோதியார் திருச்செங்காட்டங்குடியை அடைந்து திருத் தொண்டு புரிந்துவந்த நாளில் இத்தலத்திற்கு வந்த திருஞான சம்பந்தரையும் திருநாவுக்கரசரையும் வரவேற்றுப் போற்றினர் ஞானசம்பந்தர் சிறுத்தொண்டரின் தொண்டைச் சிறப்பித்து 'பைங் கோட்டு மலர்ப்புன்னை' என்றதிருப்பதிகத்தில் பாராட்டியுள்ளார்.

கயிலைப் பெருமான், சிறுத்தொண்டரின் மெய்யன்பை நுகரவும் அவர்தம் தொண்டின் சிறப்பை உலகறியச் செய்யவும் விரும்பி, பைரவவேடம்தாங்கித் திருச்செங்காட்டங்குடிக்கு வந்தார். சிறுத் தொண்டரின் இல்லம்சென்று சிறுத்தொண்டர் வீட்டில் இருக்கிறாரா? என்றுகேட்டார். சந்தனத்தாதியாரும் திருவெண்காட்டுநங்கையும் "அவர் அடியாரைத்தேடிவெளியேசென்றுள்ளார்; விரைவில்வருவார்; வீட்டில் எழுந்தருளலாம்" என்றனர். பெருமான் யாம் இருப்பது; வடதேசம்; அவரின்றி வீட்டில் இருத்தல் கூடாது; இங்குள்ள கணபதீச்சரத்தில் ஆத்திமரநிழலில் இருக்கிறோம்; சிறுத்தொண்டர் வந்தால் வந்தசெய்தியைத் தெரிவிப்பீராக! என்று கூறிச்சென்றார். அடியவரைக் காணாது மனம் வருந்தி வீடுதிரும்பிய சிறுத்தொண்டர் இதனைக் கேள்வியுற்றுக் கோயிலுக்குச்சென்று ஆத்திமரநிழலில் உறையும் உத்தராபதியாரை அமுதுண்ண எழுந்தருளவேண்டினர்.

உத்தராபதியார் சிறுத்தொண்டரிடம் 'நாம் உண்பது நரப்பசு; ஒருகுடிக்கு ஒருமகனாக - அங்கக் குறைகள் எதுவும் இல்லாதவனாக - கல்வி அறிவுள்ளவனாக இருக்கவேண்டும்; அக்குழந்தைத் தாய் பிடிக்கத்தந்தை அரிந்து கறியாக்கிப் படைத்தால் உண்போம்' என்றார்.

சிறுத்தொண்டர் அடியார் எவ்வாறேனும் அமுதுண்ண இசைந் தனரே என்று மகிழ்ந்து வீடுதிரும்பி மனைவியாரிடம் இசைவுபெற்றுச் சீராளதேவரைப் பள்ளி சென்று அழைத்துவந்து, திருமஞ்சனமாட்டி, அடியவர் கூறியவாறே அரிந்து கறிசமைக்கச்செய்து, விரைந்துசென்று அடியவரை அமுதுண்ண அழைத்தார்; திருவடிகளை விளக்கி ஆசனத்தில் இருத்தி அமுதுசெய்விக்க முயன்றார். பிள்ளைக்கறியமுது படைக்கப்பட்டது. தலைக்கறி சந்தனநங்கையார் கொண்டுவந்துதர அதுவும் பரிமாறப்பட்டது. வந்த அடியவரோ உடன் உண்ண ஒரு அடியவரை அழைத்துவருக என்றார். தேடியலைந்து ஒருவரையும் காணாமல் திரும்பிவந்த சிறுத்தொண்டரை உடனிருக்கச்செய்து உன் மகனையும் அழையும் என்றார். "அவன் இப்போது இங்கு உதவான்" என்று கூறிய சிறுத்தொண்டரை நோக்கி உத்தராபதியார் 'சென்று

அழைத்துவாரும்' என்று கட்டளையிடச் சிறுத்தொண்டரும் அவர்தம் மனைவியாரும் வீட்டுவாயில் சென்று 'செல்வமணியே! சீராளா! யாம் உய்யும்வகையில் சிவனடியார் அமுதுண்ண அழைக்கின்றார் வாராய் எனக்கூவி அழைத்தனர் சீராளன் பள்ளியினின்றும் ஓடி வருவான் போல் வந்தான். அக்குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு உள்ளே சென்ற பெற்றோர் பைரவரைக்காணாது திகைத்தனர். சிவபெருமான் உமையம்மையோடும் முருகனோடும் இடபவாகனத்தில் காட்சிதந்து சிறுத்தொண்டர், திருவெண்காட்டுநங்கை, சீராளதேவர், சந்தன நங்கை ஆகியோரைச் சிவலோகத்திற்கு அழைத்துச்சென்று தம்மை எந்நாளும் தரிசிக்கும்பேற்றை அருளினார். இந்த ஐதிகத் திருவிழா ஆண்டுதோறும் சித்திரைப் பரணியில் நிகழ்கிறது.

## விநாயகர் கயமுகாசுரனைக்கொன்ற வரலாறு :

மகதநாட்டு மன்னனுக்கு விபுதை என்றொரு மனைவி இருந்தாள். அவள் அசுரர்குலப்பெண் அவர்களுக்கு யானைத்தலையும் அசுர உடலும் கொண்ட ஒரு மைந்தன் பிறந்தான். பெற்றோர் கயமுகாசுரன் எனப் பெயரிட்டனர். அவன் தவம் செய்து சிவபிரானிடம் அழியாத வரம் பெற்று விசித்திரகாந்தி என்பவளை மணந்து மதங்கபுரத்தைத் தலைநகராகக்கொண்டு கொடுங்கோலாட்சி புரிந்துவந்தான். தேவர்களும் முனிவர்களும் கொடுமை பொறுக்காமல் சிவபெருமானிடம் முறையிட்டனர். பெருமான் விநாயகரை அனுப்பி, கயமுகாசுரனைக் கொன்றுவரச் செய்தார். விநாயகர் தன்கொம்பு ஒன்றை ஒடித்து அதனை அவன்மேல் ஏவிக்கொன்றார். இறந்தஅசுரன் தன் தவ வலியால் பெருச்சாளியாக உருவெடுத்து விநாயகரைக் கொல்ல வந்தான். விநாயகர் அதனைத் தனக்கு வாகனமாகக் கொண்டு அவன் ஆற்றலை அடக்கினார். விநாயகர் கயமுகாசுரனைக் கொன்ற போது வெளிப்பட்ட இரத்தம் பரவி ஊர் செங்காடாயிற்று. அதனால் இத்தலம் திருச்செங்காட்டங்குடி எனப்பட்டது. விநாயகர் கயமுகனைக்கொன்ற பழிதீர இத்தலத்தில் சிவபெருமானைப் பிரதிட்டை செய்து வழிபட்டு அருள்பெற்றார். இவ்வரலாறு கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

## சத்தியாஷாடமுனிவர் பூசித்தது :

இம்முனிவர் வீடுபேறுகருதிச் சிவஞானம் பெறவேண்டித் தவம் செய்தார் ரத்தநாமுகி, ரத்தபீசன் என்னும் அசுரர்கள் அவர்தவத்தை அழிக்க முயன்றனர் பெருமான் பைரவமூர்த்தியாக எழுந்தருளி அவ்சுரர்களைக் கொன்று அவர்களின் குருதி பூமியிற் படாதவாறு கலசத்தில் ஏற்றார். பூமியில் ஒரு திவலை சிதறி எங்கும் பரவ நிலம்

செந்திறம் பெற்றது. அதனுல் செங்காடு எனப்பட்டது இறைவன் முனிவர்க்குக் காட்சிகொடுத்தார். முனிவர் வேண்டுகோட்படி ஊர் சத்தியபுரி எனவும், மூர்த்தி சத்தியபுரீசர் எனவும், தீர்த்தம் சத்திய புட்கரணி எனவும் வழங்கலாயின.

### வாசுதேவன் வழிபட்டது :

திருநெல்வேலித் தாமிரபரணி ஆற்றின் கரையிலுள்ள ஓரூரில் வாழ்ந்த வாசுதேவன் என்ற அந்தணன், அகத்தியர் அருளியபடி இத்தலத்துக்குவந்து மகப்பேறு வேண்டிப் பெருமானை வழிபட்டுப் புத்திரப்பேறு பெற்ருன்.

### உத்தராபதியார் திருவுருவம் அமைந்தது :

ஐயடிகள்காடவர்கோன் என்ற பல்லவமன்னர் இறைவன் சிறுத் தொண்டருக்கு அருள்புரிந்த செய்திகளைக் கேள்வியுற்று இத்தலத் திற்குவந்த பலநாட்கள் தங்கிப் பெருமானை வழிபட்டு வந்தார். சிறுத்தொண்டருக்கு அருள்புரிய எழுந்தருளிய உத்தராபதியாரின் திருக்காட்சியைக் காணவிரும்பினுர் இறைவன் இத்திருக்கோயிலைத் திருப்பணிசெய்து உத்தராபதியார் திருவுரு அமைத்துச் சித்திரைத் திருவோணநாளில் கும்பாபிஷேகம் நடத்துவாயாளுல் சண்பகப்பூ மணம்வீச எழுந்தருளிக் காட்சி தருவோம் என்றருளினுர். உத்தரா பதியார்திருவுரு அமைக்க முயன்ற கருமார்கள் இடர்ப்பட்டனர். கும்பாபிஷேகநாள் நெருங்கிற்று. மன்னன் கருமார்களை அழைத்து விரைவில் முடித்துத்தருமாறு கட்டளையிட்டான். கருமார்கள் மிக முயன்று இறைவன் திருவுரு நன்கு அமையவேண்டுமே என்று கவலை கொண்டு உலைக்களத்தில் ஐம்பொன்னை உருக்கிக் கொண்டிருந்தனர். இறைவன் சிவயோகியார் உருக்கொண்டு வந்து உலைக்களத்தில் தண்ணீர் கொடுங்கள் என்ருர், உலைக்களத்தில் தண்ணீர் ஏது? காய்ச்சிய மழுதான் இருக்கிறது; வேண்டுமாளுல் ஊற்றுகிருேம் என்றனர். சிவயோகியார் நல்லது; அதையே ஊற்றுங்கள் என்று கேட்கக் கருமார் உலைமழுவை அவர்கையில் ஊற்றினர். வாங்கியுண்ட சிவயோகியார்மறைந்து உத்தராபதீசர் உருவானுர். இறைவன் திரு வருளை வியந்து கருமார்கள் மன்னனிடம் சென்று திருவுருவைக் கோயிலில் எழுந்தருளுவித்தனர். மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. காடவர்கோனுக்கு இறைவன் சண்பகப்பூ மணம்வீசக் காட்சி தந்தருளினுர்.

### இலக்கியங்கள் :

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் அருளிய மூன்று திருப் பதிகங்கள் உள்ளன. திருஞானசம்பந்தர் திருமருகலையும் இத்தலத் தையும் இணைத்துப்பாடிய ஒருதிருப்பதிகம் உள்ளது. திருநாவுக்கரசர்

(6 - 7 - 5, 6 - 51 - 4, 6 - 71 - 3) ஆறும் திருமுறையில் மூன்று பாடல்களிலும், சுந்தரர் (7 - 39 - 6) ஒருதிருப்பாடலிலும் இத் தலத்தைக்குறிப்பிட்டுப் பாடியுள்ளனர். சேக்கிழார், பட்டினத்தார், பரணதேவர், காளமேகப்புலவர், அருணகிரிநாதர் முதலியோர் இத் தலத்தைக் குறிப்பிட்டுப் பாடிய பல பாடல்கள் உள்ளன.

தலப்பெருமைகள் முழுவதையும் தெரிவிக்கும் சைவ எல்லப்ப நாவலர் பாடிய தலபுராணம் அச்சிடப்பெருமல் உள்ளது. தேவஸ் தானத்தின் சார்பில் மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதிய தலவரலாறு வெளியிடப்பெற்றுள்ளது.

## கல்வெட்டு:

முதலாம் இராஜராஜன் முதலாக ஏழு சோழ அரசர் காலத் தனவும், பராக்கிரம பாண்டியன் காலத்ததும், வீரவிருப்பண்ண உடையார் முதலிய இரு விஜயநகர அரசர்கள் காலத்தனவும் ஆகிய கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்ருல் அறியப் பெறும் சில உண் மைகள்: இத்தலம் கயாமாணிக்க வளநாட்டு மருகல் நாட்டுத் திருச் செங்காட்டங்குடி என அழைக்கப் பெறுகின்றது. முதல் இராஜ ராஜன் காலத்திய கல்வெட்டு மும்முடிச்சோழ வளநாட்டு மருகல் நாட்டுத் திருச்செங்காட்டங்குடி எனக் காட்டுகின்றது.

இறைவன் கணபதீச்சரமுடைய நாயனுர், கணபதீச்சரமுடைய நாயர் எனவும், பைரவமூர்த்தி உத்திராபதி நாயகர் எனவும், சீராளர், சீராளதேவர் எனவும் சிறுத்தொண்டர் சிறுத்தொண்டநம்பி எனவும், விநாயகப்பெருமான் வாதாபிகணபதி எனவும் குறிக்கப்பெறு கின்றனர்.

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே.

பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக் கத்தைப்
பேணிநினைந் தெழுவார்தம் மனத்தே மன்னி
இருந்தமணி விளக்கதனை நின்ற பூமேல்
எழுந்தருளி யிருந்தானை எண்தோள் வீசி
அருந்திறல்மா நடமாடும் அம்மான் தன்னை
அங்கனகச் சுடர்க்குன்றை அன்று லின்கீழ்த்
திருந்துமறைப் பொருள்நால்வர்க்கு அருள்செய்தானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே.

கட்டுரை எண். 14.

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M. A., B. Lit., D. P. P. A., D. U. N. I. U.,

**கண்ணியது உன்புகழ், கற்பது உன்நாமம், கசிந்துபத்தி**
**பண்ணியது உன்னிரு பாதாம்புயத்தில் பகல்இரவா**
**நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து, நான்முன்செய்த**
**புண்ணியம் ஏது? என் அம்மே! புவி ஏழையும் பூத்தவளே (12)**

அ. புவி ஏழையும் பூத்தவளே!

(1) ஏழு உலகங்களையும் பெற்றவளே என அபிராமிஅன்னையை அழைக்கிறார்.

(2) 'சப்த தீபங்கள்' எனப்படும் ஏழு தீவுகளையே 'புவிஏழும்' என்ற சொல்லால் குறித்தார். சம்பு, பிலக்ஷம், குசம், கிரௌஞ்சம், சாகம், சான்மலி புஷ்கரம் என்பவையே அவை. அவற்றுள் "சம்பூத்திவு" என்பதே நாம் வசிக்கும் பூமியாகும். கீழ் ஏழு, மேல் ஏழு ஆகிய பதினான்கு உலகங்களை அடுத்தபாடலில் குறிப்பிடுகிறார்.

(3) தான் சிறிதும் சிரமமோ, களைப்போ எய்தாமல் அன்னை, விளையாட்டாகவே உலகனைத்தையும் படைத்துவிட்டாள். "லீலாக்லுப்த ப்ரம்மாண்ட மண்டலா" என சகஸ்ரநாமம் கூறும். 'க்லுப்தம்' என்றால் ஒழுங்காக - நேர்த்தியாக - சீராக - குறைபாடின்றி எனப் பொருள்படும். அவள் விளையாட்டாகவே உலகினை எல்லாம் படைத்தாள். ஆனாலும் அவைசீராகவே அமைந்துவிட்டன'

(4) அன்னை "நான் பலவாக ஆவேன்" என சங்கல்பம் (எண்ணம்) கொண்டாள். அக்கணத்திலேயே அனைத்தும் தோன்றி விட்டன. தன்னுள் மூடிவைத்திருந்த இதழ்களை அரும்பு விரிப்பது போல் தானன்றி வேறல்லாத உலகங்களை விரியச்செய்தாள் ஆகவே, பூத்தவளே என்றார். "ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து" எனப் பின்னரும் விளக்குவார்.

(5) அண்டகோடிகள் அனைத்தையும் பூத்தவளை "புவிஏழையும் பூத்தவள்" எனக் கூறுவது ஏன்? புவியில் வாழும் நமக்கே சிறப்பாகக்கிட்டும் பேறுகளை இப்பாடலில் கூறுகிறார். அவளைக்கருதிக் கசிந்து உருகல், 'நாம சங்கீர்த்தனம்' என்னும் திருப்பெயரைப் போற்றிப் பாடுதல், 'சத்சஙிகம்' என்னும் அடியார் இணக்கம் இவை யாவும் இப்புவி மிசைக் கிடைக்கும் பேறுகள் அன்றோ? இப்பேறுகள் வாய்பின் "மனிதப் பிறவியும் வேண்டுவதே" எனவும் புவியில் பெறும் "இச் சுவை தவிர இந்திரலோகமாளும் அச்சுவையும் வேண்டேன்" எனவும் கூறுமளவிற்கு மிக உயர்ந்த பேறுகள் அல்லவா?

## ஆ. கண்ணியது உன்புகழ்

(1) ஈடுபாட்டுடன் மனத்தில் கருதியது உனது திருப்புகழே ஆகும். (கண்ணல் - கருதுதல்)

(2) 'நிஸ்ஸீம மஹிமா' - எல்லையற்ற பெருமையுள்ளவள் என்றும், 'உதார கீர்த்தி' - பெரும் புகழ் உள்ளவள் என்றும் சகஸ்ரநாமம் குறிப்பிடும். அவளது புகழினை அழியாத - உயர்ந்த - உண்மையான புகழ் எனக் கருதி வாழ்வது மஹான்களின் இயல்பு. அவ்வாறே அபிராமிபட்டரும் ஈடில்லா அவள் புகழைக் கருதினர்.

(3) மற்றும் மார்க்கண்டேயர் காலந் தொட்டு திருக்கடவூர் அபிராமியின் புகழ் திக்கெட்டும் பரவியிருந்தது. அபிராமியின் அளவிலாப் புகழினையே கருதினர்.

(4) அந்தாதி, மற்றும் பதிகங்களில் போற்றிப் பாடத்தக்கதாக அவளது திருப்புகழினையே கருப் பொருளாகக் கருதினர் அபிராமி பட்டர்.

## இ கற்பது உன்நாமம்

(1) "தமியேன் என்றும் உனது திருநாமங்களையே கற்கிறேன்" என்கிறார்.

(2) 'ஜெபிப்பது உன்நாமம்' அல்லது, 'பாடுவது உன்நாமம்' அல்லது, 'போற்றுவது உன்நாமம்' என்றோ கூருது 'கற்பது உன் நாமம்' என்கிறார். அவளது திருநாமங்கள் அனைத்தும் மந்திர வடிவானவை. அவற்றினை ஞானசிரியர்மூலம் தீட்சைபெற்றுக் கற்பதால் அங்ஙனம் கூறுகிறார்,

(3) ஒவ்வொரு திருத்தலத்திலும் அவள் ஒவ்வோர் திருநாமம் பூண்டுத் திகழ்கிறாள். ஒவ்வொரு திருநாமத்தின் பின்னும் ஒவ்வொரு

வரலாறும் ஒவ்வொரு தத்துவமும் அடங்கியிருப்பதுடன் அன்னையின் பிரபாவமும் மிளிர்கின்றன. அவற்றைக் கற்கக்கற்க அவளைப்பற்றிய பல செய்திகளும் தெளிவாகி அவளது அருட்டிறன் விளங்குகிறது. பலநாள் – பல ஆண்டுகள் சென்றாலும் இன்னும் கற்றுத் தெளிய வேண்டும் என்ற நிலையில் பல புதுப்புது செய்திகளை அவளது திருநாமம் உள்ளடக்கி இருப்பதால் 'கற்பது உன் நாமம்' என்றார்.

(4) லலிதா சகஸ்ரநாமம் என்றும், லலிதா த்ரிசதி என்றும், மந்திரிணி சகஸ்ரநாமம் என்றும், வராஹி சகஸ்ரநாமமென்றும் பல திருநாமப் புகழ்ச்சி நூல்கள் உள்ளன. அவற்றுள் லலிதாசகஸ்ர நாமத்தினை மட்டுமே ஒருவன் பூரணமாகக் கற்க ஆயுள்போதாது. பாஸ்கர ராயர் ஒவ்வொரு நாமத்திற்கும் பல விளக்கங்கள் கூறுகிறார்' அவரைத்தவிர பிற உரையாசிரியர்கள் பலரும் வேறுவிதமான பல விளக்கங்களைக் கூறுகின்றனர். அவற்றினுக்குப் பல மொழி பெயர்ப்புக்கள், பல விமர்சன நூல்கள், பல ஒப்பாராய்சி நூல்கள் என்று அவளது திருநாமப் பெருமை எல்லையின்றி விரிந்துகொண்டே செல்கிறது. அவை தொடர்ந்து கற்கவேண்டிய நிலையிலும், கற்குந் தோறும் களிப்புத்தரும் சுவையுடனும் விளங்குவதால் 'கற்பது உன் நாமம்' என்றார்.

(5) தேவி வழிபாட்டில் 'நாம பாராயணம்' என்பதும் ஒரு அங்கமாகும். 'நாம பாராயணப் ப்ரீதா' நாம பாராயணத்தால் மகிழ்பவள் என சகஸ்ரநாமமே கூறும். அவளது ப்ரீதிக்காக - மகிழ்வுக்காக பாராயணம் புரியும் நாமத்தின் உட்பொருளையும், மந்திர சக்தியையும் அறிய அடியார் அவற்றினைக் கற்கின்றனர்.

(6) 'ஹ்ரீம்' என்னும் நாமம் சகஸ்ரநாமத்தில் முக்கியமான ஒன்றாகும். ஸ்ரீ வித்தை மந்திரத்தில் மும்முறைவரும் அந்நாமத்தையே இங்கு அபிராமிபட்டர் "நாமம்" என்று ஒருமையில் கூறினார் என உரையாசிரியர் சண்முகநாதன் விளக்குகிறார்.

### ஈ. கசிந்து பத்திபண்ணியது உன்னிரு பாதாம்புயத்தில்

(1) உள்ளம் உருகி – மனங்குழைந்து தொண்டு செய்து வழிபடுவது உன் திருவடித்தாமரைகளிலேயாம்.

(2) மனதால் அவளைக்கருதி, நாவால் நாம பாராயணம் செய்து உடலால் திருவடித்தொண்டும் செய்தார். அது வெறும் வெளிப் படையான பக்தியாய் இல்லாமல் உள்ளம்கசித்து செய்த பக்தியாகும்.

(3) கற்றோரைக் கற்றோரே காமுறுவர். உண்மையாளரை உண்மையாளரே விரும்புவர். கசிந்த இளகிய கருணையுள்ள அன்னை

கசிந்துருகும் பக்தரையே விரும்புவாள். அவள் "என்றும் உள்ளக் கசிவுள்ளவள்" என சகஸ்ரநாமம் கூறும். 'நித்ய க்லின்ன' என்பது அந்நாமம்.

(4) கசிந்து திருவடித்தாமரையில் பக்தி செய்தால் அன்னையின் அருள் எளிதில் கிட்டுகிறது. தாயின் பாலுக்குவேண்டி குழந்தை கசிந்து அழுவதுபோல் அன்னையினை நினைந்து கசிந்து ஏங்கவேண்டுமென்றும், அங்ஙனம் செய்வார்க்கு அவள் அருள் நிச்சயம் கிட்டுமென்றும் இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுவார்.

(5) "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்ற சம்பந்தர் வாக்கும், "அழுதால் உன்னைப் பெறலாமே" என்ற மணிவாசகரின் திருவாசகமும், பொய்யாத பொன்னம்பலத்து ஐயாவின் தரிசனம் நையாத மனிதருக்கு ஐயே! மெத்தக்கடினம் என்ற நந்தனார் கீர்த்தனையும் இதனையே வலியுறுத்துவனவாகும்.

(6) இறைவனின் புகழினைக் கேட்கும்பொழுது, மெய்புளகித்தல் கண்களில் நீர் அரும்பல், வாய்குழறல் முதலியன 'சத்திநிபாத அறிகுறிகள்' என சைவநெறிவிளக்கும். இவ்வறிகுறிகள் உள்ளக் கசிவின் காரணமாக வெளிப்படும் மெய்ப்பாடுகள். பக்குவமெய்திய அல்லது அருளுக்குப் பாத்திரமாகிவிட்ட நிலையினைக் காட்டும் அவ்வறிகுறிகள் அபிராமிபட்டரிடம் காணப்பட்டதில் வியப்பில்லை.

## உ. பகலிரவா நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து

(1) இரவு பகல் எந்தநேரமும் விரும்பிச்சென்று கலந்துபழகியது உன்பால் விருப்பமுள்ள அடியவர் திருக்கூட்டத்திடையேயாகும். "உன்னை நயந்தோரை வையத்து" என்றும் பாடமுண்டு.

(2) சைவ நெறியினைப் போலவே சாக்த நெறியிலும் 'திருக்கூட்டச் சிறப்பு' என்னும் சத் சங்கத்தின் பெருமை வெகுவாகப் புகழப் படுகிறது.

"அடியார் இணக்கம் மற்றபற்றுக்களை நீக்குகிறது. பற்றுநீக்கம் ஆசையினை அழிக்கிறது. ஆசை அழிந்திட சலனம் தீருகிறது. சலனமும் நீங்கிட ஜீவன் முக்தி கிட்டுகிறது" என்றவிடத்து ஆதி சங்கரர் அடியார் இணக்கமே ஜீவன் முக்திக்கு மூலகாரணம் என்கிறார்.

(3) "எக்காலத்திலும், எவ்வுலகத்திலுமுள்ள அன்னையின் அடியவர்களுக்கு வணக்கம்" எனக் கூறியே தேவியின் பூஜைகள் துவங்குவது மரபு. அன்னையிடம் உள்ள ஈடுபாடும் பக்தியும், அவளைப் பணியும் அடியவர்களிடத்திலும் கொண்டு அவர்களை நணுகிச்சென்று கலந்து பழகினர் கடவூர் பட்டர் என்க.

(4) " அன்னம் பழகும் பிடிநடையாள் உலகம்மை செம்மை
கன்னம் பழகும் கயற்பார்வை வெள்ளைக் கருணைக்குள்ளே
முன்னம் பழகும் பழ அடியாரை முழுதும் நம்பி
இன்னம் பழகும் பொழுதே வரும் முத்தி இன்பங்களே "

என்ற உலகம்மை கலித்துறை அந்தாதிப்பாடலில் " அன்னையின் பழ அடியாரைப்பூரணமாய் நம்பிப்பழகும் பொழுதேஇவ்வுலகிலேயே முத்தியின்பம் கிட்டும் " என்பதனை சிங்கை நமச்சிவாயர் விளக்கு கிறார்.

(5) முக்கரணங்களையும் அவளுக்கே அர்ப்பண மாக்கியதுடன் அடியார் திருக்கூட்டத்தை நயந்து சென்று பழகியதையும் கூறி தேவிஉபாஸகர்களின் இலக்கணத்தை விளக்கிறார்.

ஊ என் அம்மே! நான்முன் செய்த புண்ணியம் எது ?

(1) முக்கரண பக்தியும் அடியார் இணக்கமும் கிட்ட அடியேன் செய்த பூர்வ புண்ணியந்தான் என்ன? என்தாயே! அறிகிலேன்! கூறியருள்வீர்.

(2) 'புண்யலப்யா' – புண்ணியத்தால் அடையத் தக்கவள் என லலிதாசகஸ்ரநாமம் கூறும். பல பிறவிகளில் பல தெய்வங்களை வழிபட்டு இயற்றிய புண்ணியமுடையவர்களுக்கே – இனிப் பிறவி இல்லை என்ற நிலை எய்தியவர்களுக்கே தேவியினை வழிபடும் எண்ணம் தோன்றும் என்பது சாக்தர்களின் கருத்து. அவ்வாறு தான் செய்த புண்ணியம் எதுவாக இருக்குமென்று வியக்கிறார் அபிராமிபட்டர்.

(3) இதே வியப்பினை ஆதிசங்கரரும் தனது சௌந்தரிய லகரியின் முதல் ஸ்லோகத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார். "மும் மூர்த்திகளும் தங்கள் பணிகள் செவ்வனே நிறைவேற தின்னைப் போற்றித் துதிக்கின்றனர். நின் சிறப்பு அங்ஙனமிருக்க முன் பிறவியில் செய்த புண்ணியம் இல்லாதவன் எப்படி உன்னை வணங் கவும் துதிக்கவும் சாமர்த்தியம் உள்ளவன் ஆகிறான் ?

" ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதம் அக்ருதப் புண்யப் பிரபவதி "

என்பது அவரது ஆச்சர்ய மொழி!

(4) "மானஸபக்தி" என்னும் மனதால் கருதுதல், 'வாசிகபக்தி' என்னும் வாயினால்திருநாமம்கூறுதல், காயிகபக்தி என்னும் உடலால் அவளுக்கும் அடியவர்க்கும் தொண்டு செய்தல் ஆகிய முக்கரண வழிபாடும் அடியார் நல்லிணக்கமும் முன்புசெய்த புண்ணியத் தினாலேயே கிட்டும் என்பது இப்பாடலின் திரண்ட பொருள்.

இப்பாடலின் பாராயணபலன் முன்செய்த புண்ணியம் முதிர்த்து இறைபக்தி எய்துதல் ஆகும்.

# * அரசு ஆலயம் அறப்பணிகள்!

**மணியன்:** இன்று தமிழ்நாட்டில் பல்வேறு ஆலயங்கள் அழகாகப் பராமரிக்கப்படுகின்றன. அதை மிகவும் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் திருப்பதியில் பெரும்பாலும் பணம் கொடுத்துதான் சுவாமி தரிசனம் செய்யவேண்டி இருக்கிறது. கேரளத்தில் சபரிமலையில் எல்லாரும் சமம். அனைவருக்கும் தர்ம தரிசனம். கடவுள் தரிசனம் கிடைக்கக் காசு கொடுக்கவேண்டும் என்ற கொடுமை தமிழ்நாட்டில் எந்தக்கோயிலிலும் இல்லாமல் செய்யப்படுமா?

**அர்ஜுனன்:** சிலருக்கு நேரம் அருமை. அதனால் அவசரமாகப் பார்த்துச் செல்லவேண்டி இருக்கிறது. சிலசமயம் முக்கியப்பிரமுகர்கள் வந்துவிடுகிறார்கள். அப்போது அவர்கள் தனியாகத் தரிசனம்செய்ய வேண்டியிருக்கிறது. ஆலயத்துக்கும் இதன் மூலம் நிதி கிடைக்கிறது. இதை அப்படி எடுத்துக்கொள்ளவேண்டும். உயர்வு தாழ்வு இல்லை.

**மணியன்:** இதனால் பொதுஜன சேவைக்கு இடைஞ்சல் இல்லையா?

**அர்ஜுனன்:** பெரும்பாலான கோயில்களில் பொதுஜனசேவை தான். பழனி, திருத்தணி, திருவேற்காடு போன்ற இடங்களில் பொதுஜன சேவையுடன், கட்டணம் கொடுத்துப் பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். தரிசனம் இதனால் தடைப்படுவதில்லை ஸ்ரீரங்கம் கோயிலில் பொதுஜனசேவை சில நேரம்; கட்டளைசேவை சிலநேரம். அப்போது ஓரளவு பொதுதரிசனம் தடைப்படுகிறது.

**சிவாச்சாரியார்:** அங்கே பூஜாகாலம் இரண்டு மூன்றுமணி நேரம். அப்போதுதான் வெளியார் உள்ளே போகமுடியாது.

---

* **கலந்துரையாடலில் பங்கு பெறுவோர்:** மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்கள், ஆர். அர்ஜுனன் (துணை ஆணையாளர், இந்து அறநிலைய நிர்வாகத்துறை), வித்துவான். வே. லட்சுமணன். திரு. சில்பி, டாக்டர். எம். எஸ். உதயமூர்த்தி. திருமதி. பூங்கோதை பாலன் (முன்னாள் தமிழ் ஆசிரியை.) சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் (சென்னை காளிகாபரமேஸ்வரி திருக்கோயில்.) மணியன், மற்றும் தாமரைமணாளன், மாயா, எஸ். லட்சுமி சுப்பிரமணியம் ஆகியோர்.

**மணியன் :** கேரளத்துக் கோயில்களில் சமத்துவம் இருக்கிறது. அதைக் காட்டுவதற்கு எல்லாரும் சட்டையை நீக்கிச்செல்லும் நியதியும் இருக்கிறது. அங்கு நிலவும் அமைதி, பக்திஉணர்வு இவற்றுக்கு இது தான் காரணமோ என்றுதோன்றுகிறது. சபரிமலையில் தரிசனம்செய்யப் போகும் அரசனுக்கும் – ஆண்டிக்கும் ஒரே மாதிரி யான ' ட்ரிட்மெண்ட் ' தான் !

**அமைச்சர் :** சபரிமலையில் ஐயப்பன் தரிசனத்துக்குரிய நாட்கள் குறிப்பிட்ட மாதங்களாக, நாட்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள கோவில்களிலும் திருவிழாக்காலங்களில், இப்படி ஏராளமான மக்கள் திரளாகவந்து, சமத்துவ உணர்வுடன் தடையின்றி தரிசனம் செய்கிறார்கள். கேரளத்துக்கோயில்களில் அர்ச்சனை இன்றித் தீபாராதனை மட்டும் காட்டப் படுகிறது. இதனால் கூட்டம் விரைவாகத் தரிசனம் செய்துகொண்டு போக முடிகிறது...

**மணியன் :** தமிழ்நாட்டில் அறநிலையத்துறை நிர்வாகத்தின் பராமரிப்பில் 33,411 கோயில்கள் இருக்கின்றன என்று தெரிய வருகிறது. இவற்றை நன்றாகப்பராமரித்தால் போதாதா? மேலும் புதுப்புதுக் கோயில்கள் அவசியந்தானா?

**அமைச்சர் :** இதை அரசாங்கம் உத்தரவுபோட்டுத் தடைசெய்ய முடியாது. அரசியல் புகுந்துவிடும். ஆன்மீக உணர்ச்சியில் அரசு தலையிடுவதாகக் குற்றம் சாட்டப்பட்டுவிடும். ஆனால் காஞ்சிப் பெரியவர்கள், மடாதிபதிகள் போன்றோர், தினம்தினம் ஆயிரக்கணக்கான பக்தர்களைச் சந்திக்கும் கதாகாலட்சேபம் செய்யும் வல்லுநர்கள். இதை மக்களுக்கு நல்லவிதமாக எடுத்துச்சொல்லலாம். குறிப்பிட்ட காரணத்துக்காகப் புதிய கோயில் உருவானால் வரவேற்கலாம். பல்லாவரம் அருகே குமரன்குன்றம் என்ற இடத்தில் அழகான பசுமையான சூழ்நிலையில் மலைக்கோயில் உருவாகிஇருக்கிறது. காஞ்சிப்பெரியவர் இங்கே ஓர் அழகியகோயில்வரும் என்றுமுன்னரே கூறி, ஆசியும் வழங்கியதாகக் கூறுகிறார்கள். மக்கள் ஒத்துழைப்புடன் கோயில் தரிசனத்துக்கு உரியஇடமாகவும் மலைஏறும் உடற் பயிற்சிக்கு வாய்ப்பளிப்பதாகவும், இயற்கையான சூழ்நிலையில் அமைந்த பொழுதுபோக்கு இடமாகவும் பயன்படுகிறது இது.

**உதயமூர்த்தி :** தனியார் கோயில்களை இந்த இலாகா எடுத்துப் பராமரிப்பதில் சிக்கல் இருக்கிறதா?

**அமைச்சர் :** நிறைய எதிர்ப்பு இருக்கிறது. தனியார் கோயில் என்கிறார்கள். ஆனால், அங்கே வந்து செல்பவர்கள் பொதுமக்கள். அவர்கள்தரும் பணம் அந்தஆலயத்துக்குப் பயன்படுகிறது. இப்படி பொதுமக்கள் வந்துபோகும்இடம் என்றாலே பொதுச்சொத்துதானே?

அப்புறம் தனியார் உரிமை எப்படி இருக்கமுடியும்? சென்னையில் 'கந்தகோட்டம்' கோயிலை முன்னூறு ஆண்டுகளுக்குமுன் ஒருபேரிச் செட்டியார் நிறுவியதாகக் கூறுகிறார்கள். இன்றும் அங்கே பேரிச் செட்டியார்கள்தாம் அதைத்தனிச்சொத்துஎன்றுஉரிமைகொண்டாடுகிறார்கள். பராமரிப்புக் குழுவை அவர்களுக்குள்ளேதான் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள். வெளியார் அனுமதிக்கப்படுவதில்லை. கடந்தஆண்டுகளில் இங்கு ஓரிரண்டுலட்சம் வசூலாகிக் கொண்டிருந்தது இப்போது ஆறேழுலட்சம் வசூலாகிறது. இதை எப்படிச் செலவு செய்கிறார்கள் என்று பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? அரசாங்கம் தலையிட்டால், ஊழல் நடக்கும்போது மக்கள் கண்காணிக்க வாய்ப்பு இருக்கும். தனியார்சொத்து என்றால் வெளியே தெரியாது. சிதம்பரம் கோயிலில்கூட இப்படி அரசாங்கம் குறுக்கிடக்கூடாது என்ற மறுப்புஇருக்கிறது.

**மணியன் :** அங்கே அரசாங்கம் தலையிட்டு என்ன செய்யத் திட்டமிட்டிருக்கிறது?

**அமைச்சர் :** 1933 ஆம் ஆண்டிலேயே நீதிமன்றம் தலையிட்டு, சில நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி இருக்கிறது. அப்புறம் 1950-51-ல் மீண்டும் பிரச்சினை. மறுபடியும் அதே நடைமுறைகளை நீதிமன்றம் உறுதிப்படுத்தி இருக்கிறது. ஆனால், அதற்குமேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சரியான பராமரிப்பு இல்லை. அரசாங்கம்தலையிட்டபிறகு 30, 35 லட்சரூபாய் செலவில் திருப்பணி நடைபெறுகிறது. இரண்டு கோபுரங்கள் முடிவடைந்திருக்கின்றன. 1, 800 ஏக்கர் நிலம் சபாநாயகர் பெயரில் - அதாவது தில்லை ஈசன் பெயரில் இருக்கிறது. ஆனால், சபாநாயகர் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்! இதில் சுமார் 800 ஏக்கர் நிலத்தைத் திரும்பப்பெற்றிருக்கிறோம். 1932-ம் ஆண்டு 3337 ரூபாய் வருமானம். இன்றும் அதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் தலையிட்டு 50,000 ரூபாய்வரை வருமானம் இருப்பதைத் தணிக்கை செய்திருக்கிறது. நான் தீட்சிதர்கள் பலரைச் சந்தித்தேன். அவர்களுள் பலருக்கு ஹைகோர்ட் ஸ்கீமின்படி செய்யப்படவேண்டியவைபற்றித் தெரியவில்லை. அவர்களுக்கு இருக்கும் உரிமைகளும் தெரியவில்லை. அரசாங்கம் தலையிடுவதால் அவர்கள் நிலைமை சீரடையும்.

**மணியன் :** கோயில் பராமரிப்பை அரசு எப்படி நடத்துகிறது?

**அமைச்சர் :** ஒவ்வொரு கோயிலும் தனித்தனி நிறுவனம். ஒரு கோயிலின் அதிகாரம் இன்னொன்றுக்கு மாற முடியாது. அறநிலையத் துறை அவற்றை ஒருங்கிணைத்து நடத்துகிறது. அவ்வளவுதான்.

சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்... திருவாரூர் தியாகராசர் கோயில் மிகப்பெரியது. அங்கு அர்ச்சகருக்கு நாற்பது ரூபாய் சம்பளம் கொடுக்க முடியவில்லை. பூஜையே சரிவர நடைபெறுவதில்லை. இதே போல தஞ்சைப் பிருகதீசுவரர் ஆலயம் வாரிசு தர்மகர்த்தாக்கள் கையில் இருக்கிறது. அவர்கள் என்ன ராஜராஜன் பரம்பரையா? அப்புறம் வந்து பிடித்துக் கொண்டவர்கள்தானே? அவர்களுக்கு இன்று உரிமை! அங்கேயும் பராமரிப்பு சரிவர நடைபெறவில்லை.

**உதயமூர்த்தி:** சில கோயில்களில் அர்ச்சனை நடைபெறுவது இல்லை என்பது தெரிந்தால் நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள்? அதற்கு என்ன காரணம்? அதை ஆராய்கிறீர்களா?

**அமைச்சர்:** சில ஏழைக் கோயில்களில் அர்ச்சகர்களுக்குத் தனிச் சம்பளம் கிடையாது. கோயிலுக்கு வரும் வருமானத்திலேயே அர்ச்சனை செய்து, அவர்களும் சாப்பிட வேண்டும் இப்படி ஒரு நியதி பல கோயில்களில் இருக்கிறது. வருமானமே இல்லாவிட்டால் அர்ச்சகர் என்ன செய்யும்? கோயிலைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு வந்துவிடுகிறார்... நான் பெரிய கோயில்களுக்குப் போவது போலச் சிறிய கோயில்களுக்கும் போகிறேன். ஆங்காங்கே கணக்குகளை விசாரிக்கிறேன். 'இது என்ன? இதுவரை அமைச்சர்கள் யாரும் இப்படிக் கணக்குக் கேட்டதே இல்லையே?' என்று அதிசயமாகச் சொல்லுகிறார்கள். பரிவட்டம், வரவேற்பு என்று செலவு செய்வார்கள். நான் அதெல்லாம் வேண்டாம் என்று சொல்லி விடுவேன்.

**உதயமூர்த்தி:** கோயில்களின் சுற்றுப்புறம் அசிங்கப்படுத்தப் படுகிறதே...? ஆண்டவன் தரிசனத்துக்கு வருபவனுக்குக்குளியலறை கக்கூசுகள் ஏன் கோயில் அருகில் கட்டப்படக் கூடாது? கோயிலைச் சுற்றி உள்ள இடத்தையே இதனால் அசுத்தப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறதே?

**அமைச்சர்:** 'கோயில்களில் கக்கூசு கட்டுவதா?' என்று ஒரு தவறான எண்ணம் இருக்கிறது. அடிப்படை வசதிகள் இல்லாவிட்டால் எப்படி சுத்தம் இருக்கும்? வடபழநி கோயிலில் விசேடநாட்களை ஒட்டி, முதல் நாளே கூட ஆயிரக்கணக்கான பெண்கள் வந்து அங்கே தங்குகிறார்கள். அவர்களுக்குக் கழிப்பறை வசதிகள் வேண்டாமா? குளியல் வசதிகள் வேண்டாமா? இப்போது முயற்சி எடுத்து இருக்கிறோம். ஒரே வாசல் வழியாக அவ்வளவு பேரும் அடைந்து, போய்வந்து கொண்டிருந்தார்கள். இப்போது இன்னொரு வாசலைத் திறந்து விட்டிருக்கிறோம். இந்த வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். மதுரை மீனாட்சியம்மன் கோயில் எவ்வளவு பிரசித்தமானது?

அங்கே குடிதண்ணீர் வசதிகூடச் சரியாக இல்லை! இப்போதுதான் வகுத்திருக்கிறோம்...

மணியன்: திருவேற்காடு கருமாரியம்மன் கோயிலில்கூட இப்போது இதுபோன்ற பணிகள் நடந்துகொண்டிருக்கின்றனவே?

அமைச்சர்: ஆமாம்! சொன்னால் வேடிக்கையாக இருக்கும் கோயில் ஒரு பஞ்சாயத்து இடத்தில் இருக்கிறது சுற்றியுள்ள தெரு இன்னொரு பஞ்சாயத்து வசத்தில் இருக்கிறது. அவர்களுக்குள்ளே சில்லறைப் பூசல்கள். தேர்சுற்றி வரவே இடம் இல்லை. தெரு கிடையாது. ஆனால் தேரைப் பண்ணிவிட்டார்கள். தேரை அங்கேயே நிறுத்தி, அப்படியே ஓட்டிவிட்டார்கள்! இப்போது இந்த நிலையைச் சீரமைத்து, ஊரை ஒரு 'டவுன் ஷிப்' நிர்வாகத்தில் கொண்டு வந்திருக்கிறோம். வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இரண்டரை லட்சருபாய் செலவில், குடிநீர் வழங்கும் வசதி செய்யப்பட்டு வருகிறது.

தாமரை: உள்துறை அலுவலர்கள், பணியாளர்களுக்கு ஏன் போதிய வசதிகள் இல்லை?

அமைச்சர்: இவர்களுடைய வருமானம் கோயிலுக்குக் கோயில் வேறுபடுகிறது. வருமானத்தைப் பொருத்து வசதிகள் கிடைக்கின்றன. நாற்பதுரூபாய் சம்பளம் கிடைக்காத அர்ச்சகரும் உண்டு. அதே பணிக்கு முந்நூறு ரூபாய் பெறும் அர்ச்சகரும் உண்டு. வருமானம் நன்றாக இருந்தால் அதற்கேற்ப வசதிகள் கொடுக்கலாம்.

சிவாச்சாரியார்: அறங்காவலர்களை எப்படி நியமிக்கிறீர்கள்? அந்தந்தப் பகுதி மக்களிலிருந்து தேர்ந்தெடுத்துப் போடுகிறீர்களா? 45 வயதுக்கு மேற்பட்டவர்களைத்தான் போடுவது - அப்போதுதான் போதுமான மனமுதிர்ச்சி இருக்கும் என்று வைத்துக் கொள்ளலாமா?

அமைச்சர்: இந்த முன்னேறிய காலதில் 25 வயது போதும்! 25 வயதில் கிடைக்காதது 45 வயதில் வந்துவிடுமா? சிறுகோயில்களுக்கு அந்தப் பகுதி மக்களிடமிருந்தே அறங்காவலர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். பெரிய வட்டாரக் கோயில்கள், மாவட்ட அளவில் கோயில்கள் என்று வரும்போது, இப்படிக் கொடுக்கப்படும் வாய்ப்பு சற்று விரிவாகப் பரவலாக இருக்கும்...

சிவாச்சாரியார்: இந்து அறநிலைய வாரியத்தில் ஏன் மதத் தலைவர்களை உறுப்பினர்களாக வைக்கக் கூடாது?

**அமைச்சர்:** எமர்ஜன்சியின் போது இந்த வாரியத்தை முழுவதும் கலைத்துவிட்டார்கள். அப்போது அமைச்சரவை இல்லை. அதனால் அமைச்சர் இதில் தலைவராக இடம்பெறவில்லை. இந்த வாரியத்தில் யார் யார் இடம்பெறுவது என்பது அமைச்சரால் தீர்மானிக்கப்பட முடியாமற் போய்விட்டது. இப்போது 'உயர் அதிகாரக் குழு' ஒன்றை உருவாக்கியிருக்கிறோம். மதத்தொடர்புள்ளவர்களும் இடம்பெறுவார்கள்.

**சிவாச்சாரியார்:** கூட்டு வழிபாடு செய்யலாமே?

**அமைச்சர்:** மற்ற மதங்களில் இதற்காக ஒரு நாளை வைத்துக் கொண்டு கட்டுப்பாடாகத் தியானம் செய்கிறார்கள். இந்து மதத்திலும் பெரியவர்கள் முன் வந்து கோயிலில் பக்தர்களைக் கூட்டி, வெள்ளியன்றோ, ஞாயிறன்றோ, ஒன்றாக அமர்ந்து கூட்டுவழிபாடு செய்ய ஏற்பாடு செய்யலாம். இதனால் ஒற்றுமையும் உருவாகும். இப்படிக்கலந்துகொள்பவர்களுக்குச் சந்தா விதித்து வசூலித்து அவர்களிடையே இரண்டு மூன்றுபேரைத் தேர்ந்தெடுத்து ஒரு நிர்வாகக் குழுவை அமைக்கலாம். இந்து சமயத்தை வளர்க்க விரும்பும் பெரியவர்கள், இப்படி ஒரு கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் வகுத்து ஏற்பாடு செய்யத் தவறிவிட்டால், 'இந்துமதம் என்று ஒரு மதம் ஒரு காலத்தில் இருந்தது' என்று சொல்லும்படியாகிவிடும். அதைத்தவிர பக்தியுள்ள மக்கள், அந்தந்தப்பிராந்தியத்தில் உள்ள கோயில்களை ஆதரித்து அங்கே வளர்ச்சி தோன்ற உதவவேண்டும். திருப்பதி, திருத்தணி, மயிலாப்பூர், திருவேற்காடு என்று இப்படியே போய்க் கொண்டிருக்கக்கூடாது. சைவ - வைணவப் பிரிவுகளை ஒற்றுமைப்படுத்தத் திருப்பாவை - திருவெம்பாவை மகாநாடு கூட்டினார்கள். காஞ்சிப் பெரியவர்கள்தான் இந்த யோசனையைக் கூறியதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், அந்த ஒரு நாள் அல்லது ஒரு வாரத்துடன் சரி! அப்புறம் சைவனும் - வைணவனும் திரும்பிக் கூடப் பார்த்துக் கொள்வதில்லை

**சிவாச்சாரியார்:** விடியற்காலையில் ஒலிபரப்பி மூலம் தெய்விகப் பாடல்கள் பாடுவதை மற்ற மதத்தினர் குறுக்கிட்டுத் தடுக்க முயன்று வருகிறார்கள்.

**அமைச்சர்:** இதற்கு எழுதிக் கொடுத்து பர்மிஷன் வாங்க வேண்டும். கூடியவரை மற்ற மதத்தினரின் பிரார்த்தனை, தொழுகை நேரத்துக்குத் தொந்தரவு இல்லாமல் இது அமையவேண்டும். இரு தரப்பினரும் ஒத்துப்போக முன்வந்தால் நாங்கள் தலையிட்டுச் சமாதானம் செய்ய முடியும்.

**சிவாச்சாரியார் :** நிறையப் படித்தவர்கள், ஜனதிபதி பரிசு பெற்றவர்கள், இப்படிப்பட்டவர்களுக்குக்கூட இந்தத் துறையில் சரியான வருமானம் இல்லை!

**அமைச்சர் :** என்னுடைய சந்தேகம், வருங்காலத்தில் இந்த வேலைக்கு யாரேனும் வருவார்களா என்பதுதான். அர்ச்சகர்களுக்கு வேறு வேலைசெய்யத் தெரியாது. இதையே நம்பிவாழ்ந்து விட்டார்கள். இப்போது இதிலும் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லை. ஒரு சமுதாயத்தின் பெயரைச்சொன்னலே அவர்கள் முன்னேறிவிட்டவர்கள் என்று சொல்லப்பட்டுவரும் இன்றைய நிலையில் அந்த சமுதாயத்தில் பலர் இன்று பரிதாபப்பட வேண்டிய நிலையில் வாழ்ந்துவருகிறுர்கள். உயர்ந்தோர் - தாழ்ந்தோர் இந்த அர்ச்சகர்களிடையேயும் இருக்கிறுர்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் மிக அதிகமான கோயில்கள் இருக்கின்றன. அழகான பல கோயில்கள் இருக்கின்றன. ஆனல், அம்மன் கோயில்களும், முருகன் கோயில்கள் மட்டும் ஓரளவு நல்ல நிலையில் இருக்கின்றன. தாயும் - பிள்ளையும் பிழைத்தார்கள் !

**பூங்கோதை பாலன் :** பிரசித்திபெற்ற ஆலயங்களில், அழகான சிற்பவேலைகள் உள்ள ஆலயங்களிலும்கூட, வெளி நாட்டினர் அனுமதிக்கப்படுவதில்லை. இது நமது 'டூரிஸம்' வாய்ப்புகளைப் பாதிக்காதா ...?

**அமைச்சர்:** நம் நாட்டில் உள்ள 'ஸ்பெஷலா'ன சுற்றுலா முக்கியத்துவம் உள்ள இடம் கோயில்கள்தாம். கடற்கரை, சோலை, அருவி போன்றவை மற்ற நாடுகளிலும் இருக்கின்றன. ஆனல்' நம்முடைய மத சம்பிரதாயம் வெளி நாட்டினரை, பிற மதத்தவரை அனுமதிக்க இடம் தருவதில்லை. தஞ்சை பிருகதீசுவரர் ஆலயம் பிரமாதமான இஞ்சினீயரிங் சாதனை. கல்லே இல்லாத பூமியில் பிரம்மாண்டமான கோயில் எழுந்திருக்கிறது. அவ்வளவு உயரமான கோயிலுக்கு ஐந்தடிதான் அடித்தளம். சாந்தே இல்லாத கற்கட்டிடம் அது. 108 கர்ணங்களில் 103 கர்ணங்கள் அங்கே சிற்ப உருவில் இருக்கின்றன. இவற்றையெல்லாம் கண்டு அதிசயிக்க வெளி நாட்டினர் ஏராளமாக வருவார்கள். ஆனல், உள்ளே போக அனுமதி இல்லை. மற்ற மதத்தில் இப்படிக் கட்டுப்பாடு இல்லை. இந்துக்களுக்கும் அந்த தாராளமான மனப்பான்மை வராவிட்டால் விரைவில் இந்துமதம் நசித்துப் போய்விடும்.

**சில்பி :** தீபம் உள்ள இடந்தான் தெய்வவழிபாட்டுக்கு உகந்த இடம் என்று சொல்லுவார்கள். ஆனல், பல கோயில்களில் இதைக் கவனிப்பதில்லையே? சரியானபடி விளக்குகள் இல்லையே?

அமைச்சர் : அதை அர்ச்சகர்தாம் அக்கறை எடுத்துக்கொண்டு கவனிக்க வேண்டும். மிகப் பெரிய கோயில்களில் இந்தச் சிக்கல் இல்லை. மிகச் சிறிய கோயில்களிலும் ஒருவழியாக நடந்து விடுகிறது. நடுத்தர கோயில்களில் தாம் ஒரு இரண்டுங்கெட்டான் நிலை!

தாமரை : மாதத்துக்கு இவ்வளவு எண்ணெய் என்று கொடுப்பது வழக்கம். அதை மிச்சப்படுத்தி எடுத்துக்கொண்டு விடுகிறார்கள்;

சில்பி : ஒவ்வொரு கோயிலுக்கும் சரியான 'ஸ்தலபுராணம்' ஒன்று இருக்கவேண்டும்.

வித்துவான் வே லட்சுமணன் : நமதுகோயில்களில் சுகாதாரம் பாதுகாக்கப்படுவதில்லை. பிரசாதங்கள் தூய்மையானவை என்று பக்தியுடன் உட்கொள்கிறோம். ஆனால், அவை சரியானமுறையில் தயாரிக்கப்படுவதில்லை.

அமைச்சர் : பிரசாதங்கள் தயாரிப்பதை காண்ட்ராக்டாக விட்டுவிட்டதுதான் காரணம். இது முறையாகக் கோயிலிலேயே நடப்பது, திருத்தணியில்மட்டும்தான். செலவு ஆனாலும் பரவாயில்லை என்று, லாபம் கருதாமல் தயார் செய்யும் பொறுப்பை ஆலய நிர்வாகிகள் ஏற்கவேண்டும்.

லட்சுமணன் : சுவாமி விக்கிரகத்தின்மீதே பல்லி, எலி இருக்கிறது. தீர்த்தத்தில் பல்லி விழுந்தால் ஆபத்துத்தான்!

அமைச்சர் : கருவறை சுத்தமாக இருக்கவேண்டும். ஆனால் உள்ளேபோக அனுமதி இல்லை. ஸ்ரீரங்கத்தில் கருவறையில் செப்புத் தகட்டுக்குள்ளே கரப்பு, பூச்சி எல்லாமே இருக்கிறது. ஆனால், உள்ளேபோக வழியில்லை. சுவர் விரிசல்கண்டிருக்கிறது. பழுது பார்க்க விடுவதில்லை. வேலூர் அருகில் ரத்னகிரிஆலயம் இருக்கிறது. அங்கேபோய்ப் பாருங்கள்! கருவறை பளிங்குபோட்டுச் சுத்தமாக இருக்கிறது. உள்ளேபோய்த் தொட்டுவணங்கலாம். சுத்தமான சூழ்நிலை, அருமையான குடிதண்ணீர் வசதி எல்லாமே உண்டு. அதைப்போலப் பிற ஆலயங்களில் கர்ப்பக்கிருகங்கள் ஏன் சுத்தமாக அமையக்கூடாது? அந்தக்காலத்தில்சில மக்களின் உபயோகத்துக்காக சிறு அறைகளைக்குறைவான உயரத்துடன் அமைத்திருந்தார்கள். புகைபடிந்து, அழுக்குச்சேர்ந்த, அவை சுகாதாரம் இல்லாநிலையில் இன்று இருக்கின்றன. பழமை என்று சொல்லி அவற்றை அப்படியே விட்டுவைக்க வேண்டுமா என்ன?

**லட்சுமணன் :** கண்ட இடங்களில் கோயில்கள் கட்டப்படு கின்றன. அதனுல் சுவாமியின் சக்தி கூடக் குறைந்துபோகும்.

**தாமரை :** ஆலயங்களில் ஷூட்டிங் நடத்த அனுமதிக்கிருர்கள். காதல் காட்சிகள்கூட, படமாகின்றன, மாம்பலத்தில் 'முப்பாத்தம்மன் கோயில்' இருக்கிறது. அங்கே நான் அடிக்கடி போவதுண்டு. பல சமயங்களில் உள்ளே போகக்கூட முடியாமல் ஷூட்டிங் நடக்கிறது.

**அர்ஜுனன் :** அது இந்துமத அறநிலையப் பராமரிப்புக்கு உட்பட்ட ஆலயம் அல்ல !

**அமைச்சர் :** இதில் கிடைப்பது நூறுரூபாய்தான். அதனுல் இப்படி அனுமதிகொடுப்பதில்லை. லாப நோக்கம் எதுவும் இல்லை. கோயில் உட்பகுதிகளின் அழகு, தூய்மை சிற்பவேலைப்பாடுகள் இவை வெளிப்படுவதற்காக அனுமதிக்கிருேம். வாரியத்துக்கு உட்படாத கோயில்களில் இப்படிநடப்பதை நாங்கள் தடுக்கமுடியாது. தனியார்கோயில்களில் தலையிட்டால் கோர்ட்டுக்குப் போய்விடு கிருர்கள். முதல்வரின் வீடு உள்ள தெருவிலேயே இப்படி ஒரு கோயில் இருக்கிறது !

**மாயா :** சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாமே ?

**அமைச்சர் :** அங்கேயும் கோயில் என்ருல் ஒருபயம் கலந்த பக்திதான் ! அரசாங்கத்தின் வாதம் எழுவதில்லை !

**லட்சுமணன் :** கோயில்களில் பூஜைசெய்பவர்களுக்கு யோக்கிய தாம்சம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டாமா ? ஒரு புகழ்பெற்ற சென்னைக் கோயிலில் திரைப்படத்துறையில் உதவியாளராக இருந்த வர்கள் எல்லாம் இன்று அர்ச்சகராக மாறி, தீர்த்தம் கொடுக்கிருர்கள். வாங்கிக்கொள்ளவேதயக்கமாக இருக்கிறது. இதற்குத்தகுதி, தூய்மை எதுவும் வேண்டாமா ?

**அமைச்சர் :** ஆகம பாடசாலைகளில் படித்துத் தேறியவர்களைத் தான் நியமிக்கிருேம். தகுதிவேண்டும் என்பது மிகவும் முக்கியம். விசாரிக்க ஏற்பாடுசெய்கிறேன்.

**மணியன் :** தருமபுர ஆதீனப் பராமரிப்பில் உள்ள ஆலயங்கள் சுத்தமாக இருக்கின்றன. மற்ற ஆலயங்கள் ஏன் அப்படி இல்லை?

**அமைச்சர் :** ஆலய நிர்வாகிகள் கவனம் செலுத்த வேண்டிய பிரச்னை. கவனிக்கிருேம்.

நன்றி — இதயம். 11—1—81

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு மாசித்திங்கள் 7ஆம் நாள் (18—2—'81) புதன்கிழமை காலை திருஇராமனதீசுவரம் ஸ்ரீ இராமநாதர் திருக்கோயிலிலும் திருப்பயற்றூர் ஸ்ரீதிருப்பயற்றுநாதர் ஆலயத்திலும் மாலை திருச்செங்காட்டாங்குடி ஸ்ரீ உத்தராபதீசுவரர் ஆலயத்திலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. அவ்வத்தலங்களில் திருப்பதிகப் பாராயணம் நடைபெற்றது. காலை 9 மணியளவில் திருஇராமனதீச்சரம் திருக்கோயிலிலும் காலை 11 மணியளவில் திருப்பயற்றூர்த் திருக்கோயிலிலும் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. திருப்பயற்றூரில் திருக்கோயில் அறங்காவலர்கள் திரு G. இராமநாதம் பிள்ளை, திரு. முத்துக்குமாரசாமிப் பிள்ளை, திரு. வேதநாயகம் பிள்ளை ஆகியோர் அனைவரையும் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்றனர்.

திரு. முத்துக்குமாரசாமிப் பிள்ளை அவர்கள் தமது இல்லத்தில் அனைவர்க்கும் மாகேசுவரபூசை செய்து சிறப்பித்தார். மாலை திருச்செங்காட்டாங்குடியில் தருமையினின்று வந்திருந்த அன்பர்கள் தேவஸ்தானத்தின் சார்பில் பூரணகும்ப மரியாதையுடன் சிறப்பான முறையில் வரவேற்கப்பட்டனர். வழிபாட்டில் திருச்செங்காட்டாங்குடி ஆலயத் திருமுறைப் பணியாளர் திரு. தியாகராஜ தேசிகர் அவர்களால் தலத் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. வழிபாட்டின் அங்கமாகத் தருமையாதீனப்பல்கலைக்கல்லூரி முதல்வர் வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் 'தலத்தேவாரச்சிறப்பு'ப் பற்றியும், ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகள் 'சிறுத்தொண்ட நாயனார்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். தேவஸ்தான நிர்வாகஅதிகாரி திரு. செல்வமணி பி.ஏ., அவர்களும் அறங்காவலரும் வழிபாடு சிறப்புற நிகழ உதவினார்கள். வழிபாட்டில் அன்பர் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## திருபுவனத்தில் குருபூஜை விழா

தருமையாதீனம் 17 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகதேசிகஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் குருபூஜை

விழா 22—2—'81 ஞாயிறன்று திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயில் சந்நிதிவீதியில் உள்ள குருமூர்த்த ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேகஆராதனைகள் நடைபெற்றன. நண்பகல் மகேசுவரபூஜை நடைபெற்றது. மாலை 6 மணியளவில் மாயூரம் வித்துவான் திரு. சுந்தரேசம் பிள்ளை, எம். ஏ. அவர்கள் 'பண்டார சாத்திரம்' என்னும் பொருளிலும். குடந்தை திரு. எஸ் சுந்தரேசன் செட்டியார், பி. ஏ. எல். டி. அவர்கள் 'குருலிங்க சங்கம வழிபாடு' என்னும் பொருளிலும் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் வந்திருந்து குரு மூர்த்த வழிபாடு செய்தும் சொற்பொழிவுகளைக்கேட்டும் பயன் பெற்றனர்.

## தருமையாதீனத்திற்கு ஜெர்மானியப் பாதிரியார் வருகை

கிறிஸ்தவலூதிரன் சர்ச் பிரிவைச்சார்ந்தவரும் உலகமுழுமைக்கும் அப்பிரிவினரின் இரண்டாமவராக விளங்குபவரும் மேற்கு ஜெர்மானிய நாட்டினரும் ஆகிய Dr. Rev. ஹார்ட்ரெல்லர் என்ற பாதிரியார் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசிக்கவும் தரிசித்து இந்து சமயம் பற்றிய விளக்கங்களை அறியவும் 3—2—'81 அன்று தருமைக்கு வந்திருந்தார். அவர் இந்தியா முழுமையும் சுற்றுப்பயணம்செய்து, இந்து சமயம் பற்றிய செய்திகளை அறிந்துவருகிறார். அவர் தருமைக்கு வந்தபோது Rev. ஜான்சன் ஞானபரணம் அவர்களும் அவர் துணைவியாரும் உடன் வந்திருந்தனர்.

ஜெர்மானியப் பாதிரியார் உரிய முறையில் வரவேற்கப்பட்டு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைச் சந்தித்து உரையாட ஏற்பாடாகியிருந்தது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றப் பொதுச் செயலாளர் திரு. வை. ஆறுமுகம் பிள்ளையவர்கள் மொழிப்பெயர்ப்புப் பணிபுரிய, உரையாடல் நிகழ்வுற்றது.

பாதிரியார் அவர்கள் உரையாடலின் தொடக்கமாகத் தம் மகிழ்வைப் புலப்படுத்தினர். பின்பு இந்திய யோகிகள் சிலர் பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் மேற்கொண்டும், உபதேசித்தும் வரும் சமயக்கருத்துகள் மாறுபட்டனவாய் உள்ளன எனத் தாம் எண்ணுவதாகக் கூறித் தம் ஐயத்தை வெளியிட்டார்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அண்மையில் ஆதீனத்திற்கு வருகை புரிந்த அமெரிக்கர், சுப்பிரமணிய சுவாமி என்

பேசும் ஆங்கிலத்தின் இந்தியர்க்கு விளங்காத ஒலிப்புமுறைபற்றிக் கூறி, ஜெர்மானியப் பாதிரியார் பேசும் ஆங்கிலம் விளங்கும் தன்மையினையும் ஒப்பிட்டுக்காட்டி. ஒலிப்பு மாறுபாடு இருப்பினும் மொழி ஒன்றே என்றும் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு மக்கள் பேசும்தமிழ் வேறுபாடுடையதுபோலத்தோன்றினும் மொழி ஒன்றேதான்; அதுபோலச் சமயச்சடங்கு, பின்பற்றுமுறை, உபதேச முறையில் ஒருவர்க்கு ஒருவர் வேறுபட்டாலும் சமயம் ஒரேகருத்தை வலியுறுத்துகின்றது என்றெல்லாம் அருளிச்செய்த பாங்கு ஜெர்மானியப் பாதிரியாருக்குப் பெரிதும் மனநிறைவினை நல்கியது. அடுத்து மொழிபெயர்ப்பாளர் ‘ இந்துசமயம் ’ என்று ஒரு தனிப்பட்ட சமயம் இல்லை; சைவம், வைணவம், சாக்தம், அத்வைத மதங்களே இந்துசமயம் என ஒட்டு மொத்தமாகக் கூறப்பெறுகிறது என்பதைச் சுட்டி உணர்த்தினர் இச்சமயங்கள் தாமும் தொன்மை காரணமாகப் பிளவுபட்டனவே என்ற கருத்தினை இந்திய அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக் காலத்துப் பிளவுபட்ட கட்சிகள் போலப் பல பிரிவின ஆயின என்று தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பலவகை ஆதாரங்களுடன் எடுத்து விளக்கியருளினர்கள்.

பாதிரியார் சைவ தத்துவம், தீட்சை முதலியனபற்றிய கருத்துக்களை அறியவிரும்பி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் விண்ணப்பம் செய்துகொண்டார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் பதி,பசு,பாசம் என்ற முப்பொருள் உண்மைகளை விளக்கி, “ பதிவினைப்போல் பசு, பாசம் அநாதி ” என்பதைச் சிறப்பான முறையில் நன்குவிளங்கும்வண்ணம் எடுத்துரைத்தருளினர்கள். மேலும் கையிலுள்ள விரல்களின் அமைப்பினைச் சுட்டிச் சின்முத்திரைத் தத்துவத்தை உணர்த்தியமை சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்திருந்தது. சைவமடங்கள் பற்றிய வினு எழுந்தபோது பல மடங்களும் சமயப்பணி செய்யும் தன்மையை எடுத்துக்கூறித் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய மடங்களின் தனித்தன்மையை உணர்த்தினர்கள்.

அடுத்துப் பாதிரியார், குண்டலினியோகம் பற்றிய கருத்து அறிய விரும்பியபோது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நெறிபற்றி விளக்கி அறிவு நெறியின் சிறப்பும் யோக நெறியின் அருமைப்பாடும் உணர்த்திய ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்கள் குண்டலினி யோகம் பயிறல், பயிற்றுவித்தலுக்குத் தகுதியுடையோர்பற்றிப் போதுமான மனநிறைவின்மையைக் குறிப்பிட்டருளினர்கள். பாதிரியார், பெரிதும் அக்கருத்தோடு இயைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளுரைகள் அனைத்தும் சைவசமயம் பற்றிய உண்மைகளை அறியவிரும்பி வந்திருந்த ஜெர்மானியப் பாதிரியாருக்கு மனநிறைவை அளித்தமையை அவர்கள்

ஏற்றுக்கொண்ட முறை நன்கு புலப்படுத்தியது. ஒன்றரைமணி நேர உரையாடலின் பிறகு உரிய முறையில் பாதிரியார் விடை பெற்று, மகிழ்வுடன் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மதுரையில்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணி மன்றம் மூன்றாவது திருமுறைக் கூட்டு வழிபாட்டு விழா

மதுரை ஸ்ரீகுருஞானசம்பந்தர் இறைபணி மன்றத்தின் சார்பாகத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளத்தின் படி மதுரை ஸ்ரீ இம்மையில் நன்மைதருவார்கோயிலில் மூன்றாவது திருமுறைக் கூட்டு வழிபாட்டுக் கூட்ட விழா 1—3—81 ஞாயிறு காலை 9—30 மணிக்கு நடைபெற்றது. சிவகங்கை தேவஸ்தானப் பொதுப்பணி மன்றத்தினரை வரவேற்று வழிபாடு செய்துவைத்தனர். சிவபுராணம் ஓதி அன்பர்கள் வலமாகவந்தனர். ஸ்ரீ சுவாமிசந்நிதி முன்பு அமைந்திருந்த மேடையில் வழிபாட்டுக் கூட்டத்திற்கு மதுரைப் பல்கலைக் கழகச் சைவத்துறைப் பேராசிரியர் திரு. க. வச்சிரவேல்முதலியார் தலைமை ஏற்றார். புலவர். திரு தா. குருசாமி தேசிகர், திருமுறைவாணர்கள் கு. மணிகண்ட ஓதுவார், யாழ். சீதாராம ஓதுவார் ஆகியோர் வழிபாட்டில் விதிக்கப்பட்டிருந்த நமச்சிவாயத் திருப்பதிகங்களை ஓதினர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல்துறைத் தலைவர் திரு, க. வெள்ளைவாரணனர், திருஞானசம்பந்தர், சுந்தரர், ஆகியோரின் நமச்சிவாயப் பதிகங்கட்கு விளக்கமளித்தார். திரு. க. வச்சிரவேல் முதலியார் அப்பர் அருளிய நமச்சிவாயப் பதிகத்திற்கு விளக்கம் தந்தார்கள். மதுரைப் பல்கலைக் கழக இசைப் பேராசிரியர் குடந்தை திரு. ப. சுந்தரேசனர் வழிபாட்டுப்பண்ணைத் தொடங்கிவைத்தார். மதுரைப்பல்கலைக்கழகத் தமிழியல்துறைப்பேராசிரியர் மகாவித்துவான் திரு மு சண்முகம்பிள்ளை நமச்சிவாயப் பதிக வரலாறுகளைத் தொகுத்துப்பேசினர். ஆராய்ச்சி மாணவர்களும், பேராசிரியர், புலவர்கள் பலரும் கலந்து கொண்டு வழிபாட்டைச்சிறப்பித்தனர். அமைப்பாளர் புலவர். திரு. தா.குருசாமி தேசிகர் மன்றச் சார்பில் ஒவ்வொரு ஆங்கிலமாதத்திலும் முதல் மூன்றாவது ஞாயிறுகளில் திருமுறைப்பதிகம் ஒவ்வொரு தலத்திலும் ஓதி வழிபாடு செய்யும் விவரத்தை எடுத்துக்கூறி, அறிஞர்கள் பலர் கலந்து விரிவுரையாற்றும் இவ்வழிபாட்டில் எல்லோரும் வருகை தந்து சிறப்பிக்கவேண்டுமென்று கூறி நன்றி நவின்ற பின்பு வாழ்த்துடன் விழா நிறைவுற்றது.

உ

# எதிர்காலம்

★

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

**ரௌத்திரி ஹூ பங்குனி மீ 1உ முதல் 30உ முடிய.**

**( 14—3—1981 முதல் 12—4—1981 முடிய )**

| | | | |
|---|---|---|---|
| சூ செ | ல/ | | சந் |
| பு சு | இராசி | | ரா |
| கே | | | |
| | | | கு சனி |

| | | | |
|---|---|---|---|
| | சு சனி | கே கு | |
| | அம்ஸம் | | சூ |
| சந் | | | செ |
| | ரா பு | ல/ | |

ஸ்ரீ ரௌத்திரிஹூ பங்குனிமீ 1உ ஸ்திரவாரம் திருவாதிரை நக்ஷத்திரம் கரஜை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 7 நாழிகை 40 விஞடிக்கு மேஷ லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் கும்பராசியிலிருந்து மீனராசி சங்கிரமணமாக பங்குனி மாதப் பிரவேசம் செய்தருளுகிருர். அன்று ஷட சீதி புண்ணியகால மாகும். பங்குனி மீ 23உ பானுவாரம் சைத்திர சுத்த பிரதமை சாந்திரமான வருஷாரம்பமாகிறது. சாந்திரமான வருஷாதிபதி சூரிய பகவான் கலியுகாப்தம் 508உ துன்மதி வருஷத்திற்கு இராஜா வாகிருர். அதன் பலன் உலகநாடுகளில் ஆளுநர்கள் ஒருவருக் கொருவர் விரோதம் கொள்வார்கள். பிரஜைகள் சத்துரு சோரர்களால் பாதிக்கப்படுவர் அக்கினியால் விபத்துக்களால் பொருட்சேதம் மானிட உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும். கோமாரியால் கால்நடை களுக்கு நலிவுஏற்படும். சர்வேஸ்வரன் கிருபையினின்றும் ஆன்ருேர் களால் நாடெங்கிலும் பராமரிப்பு இயக்கங்கள் ஏற்பட்டு சமூக

சேவைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும். தேசங்களில் ஜனாதிபதிகள் மந்திரிகளால் ஆட்சியில் ஜனரட்சகத்திற்கும் தீவிரம் காணும்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சித்தர்களுக்கு வந்துள்ள சிவஞான குருமகான்கள் உலகில் எல்லா நாடுகளிலும் உள்ள மாந்தர்களுக்குச் சிவ சமயநெறியினைச் சீடர்கள் மூலம் அறிவித்து உய்வழியடையச் செய்தருளுவார்கள். அன்னார் ஆணையின்படி புண்ணிய சீலர்களால் ஆலயத்திருப்பணிகள் தெய்வ சம்ரோக்ஷணங்கள் புனிதமாக நடந்துவரும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் நடைபெறும். ஆலய நிர்வாகங்களில் சிறந்துள்ள உத்தம சீலர்களின் சாதனையில் திருக்கோயில்களில் சைத்ரோத்ஸவ வைபவம் விமரிசையாக நடைபெறும். பிரஜைகள் மூர்த்திகளின் அலங்கார தெய்வலட்சண திருத்தோற்ற பிரதிமையில் தெளிவுற்றவர்களாகி நன்னெறியில் திகழ்வார்கள்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடந்துவரும். மாத முதலில் நல்ல பணவருமானம்வரும் அதற்கேற்ப சுபச்செலவும் ஆகும். சகோதரருக்கு உல்லாசம் தரும். நவீன இயந்திரங்களின் பிராப்தியை தரும். புத்திரர்களின் கல்வி கலைகளின் தகுதியில் உயர்வுஏற்படும். தாம்பத்தியவாழ்க்கை தெய்வபக்தியாகநடந்துவரும். மார்ச்சு 14, 15, 20 21, 22, 23, 24, 30, 31 ஏப்ரல் 1, 2, 3, 6, 7, 10, 11 தேதிகளில் தெய்வ தரிசனம், மதிப்பு உயர்தல், தனகாயம் ஆகிய நற்பலன் தரும். மார்ச்சு 25, 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½**

( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும் குடும்பாபி விருத்தியில் நான்குவிதங்களில பொருள்களின் வருமானம்வந்துசேரும். சகோதரர் சுகம் நன்றாகஇருந்துவரும். மார்ச்சு 23உ க்கு வீடு வாகன பிராப்தியில் நல்லன ஏற்படும். புத்திரனுக்கு சுபம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். மார்ச்சு 16, 17, 23, 24, 25, 26, 27 ஏப்ரல் 1, 2, 3, 4, 5, 8, 9, 12 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை ஏற்படுத்தும். மார்ச்சு 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம் மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾**

( கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் கெடியான தோரணைக்கு ஏற்ப வரும். சகோதரர்களுக்கு நல்ல ஸ்திதியை உண்டாக்கும். வழக்குகளில் வெற்றியைத்தரும். அரசாங்ககாரியம் பரோபகாரநற்பணிகள் துரிதமாக நடைபெற்றுவரும். வித்துவத்துவம் கலை துறையில் பிரபலஸ்திதியை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்முக இருந்துவரும். மார்ச்சு 14, 15, 18, 19, 25, 26, 27, 28, 29 ஏப்ரல் 3, 4, 5, 6, 7, 10, 11 தேதிகளில் நற்பலன் தரும். மார்ச்சு 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

**4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.**

( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வந்து நிறையும். பத்திரலிகித விஷயங்களில் மார்ச்சு 29 தேதிக்குள் விசேஷமான ஏற்பாடுகள் ஆகும். சம்பூர்ண ஸ்திதியடையும். வாகன சுகம் திருப்தியளிக்கும். தாரசௌக்கியம், புத்திரர்களின் சௌக்கியம் நன்முக இருந்துவரும். மார்ச்சு 16, 17 21, 22, 28, 29, 30, 31 ஏப்ரல் 6, 7, 8, 9, 12 தேதிகளில் மிக ஸ்லாக்கிய பலனை ஏற்படுத்தும். ஏப்ரல் 1, 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼**

( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே. )

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுகநடக்கும். பணவருமானம் வந்து கொண்டிருக்கும். நிர்பந்தமாக செலவும்ஏற்படும். சகோதரர் தேக நலம் பாதித்து உடன் குணமாகும். மார்ச்சு 23உ முதல் வாகனத்தில் நற்பலன் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்முக இருந்துவரும். மார்ச்சு 14, 15, 18, 19, 23, 24, 30, 31, ஏப்ரல் 1, 2, 8, 9, 10, 11 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஏப்ரல் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**

( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானங்கள் நல்லசமயத்திற்கு வந்துசேரும்.

சகோதரர் சம்பந்தமாக செலவுசெய்யும். வீடு வாகன பிராப்தியில் நல்ல சௌக்கியம் தரும். ஜீவனோபாயத்தில் எதிர்பார்த்த வகையில் நன்மையடைதல் ஆகும். மனைவியின் தேகம் வெப்பத்தால்பாதிக்கும். புத்திரர்களுக்கு நல்ல சௌக்கியம் தரும். சம்பத்து உண்டாகும். மார்ச்சு 14, 15, 16, 17, 21, 22, 25, 26, 27, ஏப்ரல் 1, 2, 3, 4, 5, 10, 11, 12, தேதிகளில் நற்பலன் களையளிக்கும். ஏப்ரல் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

**7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**
**( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )**

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் நல்ல பண வருமானங்களை ஏற்படுத்திவரும். சகோதரர் முன்னேற்ற ஸ்திதியில் இருந்து வருவர். வாகன சௌக்கியம் நன்றாக இருந்துவரும். எல்லாகாரியங்களும் வெற்றிகரமாக நடந்துவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மார்ச்சு 16, 17, 18, 19, 23, 24, 28, 29 ஏப்ரல் 4, 5, 6, 7, 12 தேதிகளில் மிக நற்பலன் களையளிக்கும். ஏப்ரல் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

**8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.**
**( தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு. )**

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு நல்லன ஏற்படும். வாகன பிராப்தியில் நல்ல சௌக்கியம் தரும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய வீண் அலைச்சல் சொந்த ஸ்திரியின் தெற்பநலிவு நீங்குவதாகும். மார்ச்சு 18, 19, 20, 21, 22, 25, 26, 27, 30, 31 ஏப்ரல் 6, 7, 8, 9, தேதிகளில் நற்பலன் தரும். மார்ச்சு 14, 15 ஏப்ரல் 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திபலன் தரும்.

**9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் ¼**
**( யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே. )**

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் கணிசமான பணவருமானம்வரும் உடன்செலவு ஆகும். சகோதரருக்கு உயர்ந்த ஸ்திதி ஏற்படும். வீடு வாகன வசதியில் நல்ல சௌக்கியம்தரும். புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மனைவிக்கு உஷ்ணத்தால் நலிவு ஏற்பட்டு உடன்குணமாகும். மார்ச்சு 14, 15, 21, 22, 23, 24, 28, 29 ஏப்ரல் 1, 2, 8, 9, 10, 11

தேதிகளில் நற்பலன் ஏற்படும். மார்ச்சு 16, 17 ஏப்ரல் 12 இத்தேதிகளில் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்

**10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½**

**(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)**

மகர ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் கணிசமாகப் பொருள் வரவை ஏற்படுத்தும். பொன்மணி பூஷணங்களையளிக்கும். வாகன சுகம் திருப்தியளிக்கும் மார்ச்சு 20 தேதிக்கு மேல் புத்திர பிராப்தி ஒன்று ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுகமும் நிலவும். மார்ச்சு 14, 15, 16, 17, 23, 24, 25, 26, 27, 30, 31 ஏப்ரல் 4, 5, 10, 11, 12 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். மார்ச்சு 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

**11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾**

**(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)**

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் நிரந்தரமாக பண வருமானம் வரும். அடிக்கடி அவசியமானவற்றில் செலவு ஏற்பட்டுக்கொண்டிருக்கும். முக்கியஸ்தர்களிடம் அவசர வார்த்தையைத் தவிர்த்து நிதானமாக உரையாடுதல் நலம். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனை செய்ய நன்மை உண்டாகும் வீடு வாகனங்களில் சௌகரியம் நன்ருக இருந்து வரும். தாரபுத்திரர்களுக்கு சௌகரியபலன் தரும். மார்ச்சு 16, 17, 18, 19, 25, 26, 27, 28, 29 ஏப்ரல் 1, 2, 3, 6. 7, 12 தேதிகளில் நற்பலன் தரும். மார்ச்சு 20, 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம், மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

**12. மீனம் :- பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.**

**(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)**

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பத்தில் பண வருமானம் வரும். சுபவிசேஷங்களில் செலவு ஆகும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரபலஸ்திதியாகும். தேகத்தில் உஷ்ண பிடிதம் ஆகி சௌகரியம் ஆகும். புத்திரர் பௌத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். மனைவிக்குப் பித்தவாத நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். மார்ச்சு 18, 19, 20, 21, 22, 28, 29, 30 ஏப்ரல் 4, 5, 8, 9 தேதிகளில் மிகுந்த நற்பலன் தரும். மார்ச்சு 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

# பங்குனிமாதச் சிறப்பு நாட்கள்

| | |
|---|---|
| 14—3—81 | சனி, ஷடசீதி புண்ணியகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். காரடையான்நோன்பு, மீன ரவி 7-40. திருவையாறு அத்தணர்புரத்தில் ஸ்ரீ திருநந்திதேவர் ஜனனம். (திருவாதிரை) இரவு பட்டாபிஷேகம். |
| 15—3—81 | ஞாயிறு, திருக்கற்குடி ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி சம்வத்ஸராபிஷேகம். திருவையாறு திருமழபாடியில் ஸ்ரீ திருநந்திகேசுவரருக்குத் திருக்கல்யாணம் (புனர்வசு நக்ஷத்திரம்) |
| 17—3—81 | செவ்வாய், ஆயில்ய விழா. |
| 18—3—81 | புதன், பிரதோஷம். |
| 20—3—81 | வெள்ளி, பங்குனி உத்திரம். வேளூர். திருவையாறு முதலிய தலங்களில் பங்குனி உத்திர தீர்த்தம். தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் அவர்கள் துன்மதி வருடத்திய குருபூஜை விழாவின் திருமுகம் ஒப்பமிட்டுப் பூஜையில் வைத்தருளல். பௌர்ணமி விரத பூஜை, மாத பூஜையில் தயிர் அபிஷேகம் |
| 21—3—81 | சனி, திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரசுவாமிக்கும், திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமிக்கும் சம்வத்ஸரா அபிஷேகம். |
| 23—3—81 | திங்கள், காரைக்காலம்மையார் குருபூஜை. |
| 24—3—81 | செவ்வாய், சங்கடஹரசதுர்த்தி. |
| 25—3—81 | புதன், தருமையாதீனம் 21 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை |
| 26—3—81 | வியாழன், சீகாழி ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி சம்வத்ஸரா [ அபிஷேகம். |
| 28—3—81 | சனி, காளாஷ்டமி. |
| 2—4—81 | வியாழன், பிரதோஷம், தண்டியடிகள் நாயனார் குருபூஜை. |
| 3—4—81 | வெள்ளி, மாத சிவராத்திரி. |
| 4—4—81 | சனி. சர்வ அமாவாசை. |
| 5—4—81 | ஞாயிறு, வசந்த நவராத்திரி ஆரம்பம். தெலுங்கு வருடப் பிறப்பு. யுகாதிப்பண்டிகை. |
| 7—4—81 | செவ்வாய், தருமை ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேம். கிருத்திகை விரதம். திருக்கடவூர் ஸ்ரீ முனீஸ்வரர் பூஜை. |
| 8—4—81 | புதன், வேளூர்க் கிருத்திகை. திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி சம்வத்ஸராபிஷேகம். நேச நாயனார் குருபூஜை |
| 9—4—81 | வியாழன், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவர சுவாமி சம்வத்ஸராபிஷேகம். திருக்கடவூர், சீகாழி, திருப்பனந்தாள், திருவையாறு முதலிய தலங்களில் துன்மதி வருடத்திய சைத்ரோத்ஸவ துவஜாரோகணம். |
| 10—4—81 | வெள்ளி, சீகாழி ஸ்ரீ திருஞானசம்பந்தர் அபிஷேகம். திருமுலைப்பால் உற்சவம். காலையில் ஸ்ரீ உமாமகேசுவரர் புறுகாப்பு, கணநாத நாயனார் குருபூஜை. |
| 12—4—81 | ஞாயிறு, ஸ்ரீராமநவமி, வசந்தநவராத்திரிபூர்த்தி. முனையடுவார் நாயனார், தொகையடியார்கள் குருபூஜை. |

GNANASAMBANDAM Regd. No Tn / NM 2

The following particulars regarding the ownership of the GNANASAMBANDAM the Monthly newspaper, are published as called for by Rule 8 of the Registration of News papers (Central Rules. 1956.)

## Form IV

1. Place of publication - DHARMAPURAM

2. Periodicity of its publication - MONTHLY

3. Printer's and Publisher's Name - Sri V. RAMAIAH PILLAI
   Manager,
   Dharmapuram Adhinam Mutt.

   Nationality - INDIAN
   Address - West. Street, Dharmapuram
   Mayuram P. O 609 001

4. Editor's Name - Vidwan Srimath.
   RAMALINGA THAMBIRAN
   SWAMIGAL

   Nationality - INDIAN
   Address - Velur Devasthanam,
   Vaithiswarankoil. 609 117

5. Names & addresses of individuals who own the Newspaper, own partnerships or share holders holding more than one percent of the total Capital - His Holiness Sri - la - Sri SHANMUKA DESIKA GNANASAMBANDA PARAMACHARYA SWAMIGAL Avl
   Tharmapuram Adhinam.
   Dharmapuram
   Mayuram (P. O.) Tamilnadu

I. V. Ramaiah Pillai hereby declare that the particulars, given are true to best of the my knowledge & belief.

(S-d) V. RAMAIAH PILLAI.
Publisher.

Dated 24—2—1981.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram